


# நினைவுகள் சுமந்து

எம். சிவசோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் சுமந்து

மா.சிவசோதி

ஜீவநதி வெளியீடு - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நினைவுகள் சுமந்து** (சிறுகதைத்தொகுதி)
**மா.சிவசோதி**

முதற் பதிப்பு : புரட்டாதி 2017
வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பதிப்புரிமை : சி. ஆனந்தரூபி
அட்டைப்படம் : த.ரிலக்சன்
பக்க வடிவமைப்பு : க.பரணீதரன்
அச்சுப்பதிப்பு : பரணீ அச்சகம், நெல்லியடி
பக்கம்: viii +64
விலை : 250/-

Ninaivukal Sumanthu (collection of Short stories)
M.Sivasothy

First Edition : September 2017
Published by: Jeevanathy, Kalaiaham, Alvai
Copy Rights : S.Anantharuby
Cover Photo : T.Tilaxan
Page setup : K.Bharaneetharan
Printed by : Baranee printers, Nelliady
Pages: viii + 64
Price : 250/-
ISBN: 978-955-0958-04-7

**ஜீவநதி வெளியீடு – 91**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை தன் கருவறையிற்

சுமந்து மண்ணுலகில் வாழ வைத்து

விழி மூடிப்போன

"என் தாய்க்கும்"

நான் ஆளாகி எழும்வரை

தோளோடு தாங்கி - இன்று

மீளாத் துயில் கொண்ட

"தந்தைக்கும்"

இந்நூல் சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மா.சிவசோதி எழுதிய "நினைவுகள் சுமந்து" என்னும் சிறுகதைத் தொகுதியைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

சிவசோதி எமது மாணவன். அவனுக்குள் இத்தகைய ஆற்றல் இருக்கிறது என்பதை மாணவப் பருவத்திலே நான் அறியவில்லை. அறியும் வாய்ப்பும் வசதியும் இல்லாத கற்றலும் கற்பித்தலும் தானே நமது கல்விமுறைமையிற் கோலோச்சுகின்றது.

சிவசோதி கரவெட்டியைச் சேரந்தவர். செ.கதிர்காமநாதன், ரஞ்சகுமார், ச.முருகானந்தன் முதலான சிறந்த சிறுகதையாளர் களைத் தந்த கிராமம் கரவெட்டிக் கிராமம். கரவெட்டியின் பண்பாடு, பழக்கவழக்கம், மொழி, வாழ்வியல் முதலானவை ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக இருக்கின்றன என்று கருதுகிறேன்.

சிவசோதியின் கதைகளைப் பார்க்கும் போது புதுமைப்பித்தன் 'நான் கண்டது, கேட்டது, காணவிரும்பியது, காண விரும்பாதது இவை தான் என்னுடைய கதைகள்' என்று கூறிய கூற்றே நினைவுக்கு வந்தது.

நானும் கரவெட்டியைச் சேர்ந்தவன். கரவெட்டியின் இயற்கை ஒரு வித்தியாசமானது. நீர்வளம், நிலவளம் என்று சொல்லுவார்களே அது வறியவர்களும் செல்வர்களும் போலத்தான். இடையிடையே நல்ல தண்ணீரும் பல இடங்களிலே உப்பு(சவர்) தண்ணீரும் உள்ள கிராமம் அது. பெரும்பாலான கவிஞர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் இந்த உப்புத் தண்ணிப் பகுதியிலே இருந்து தோன்றி இருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றார்கள்.

மிகப் பெரிய கவிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள் பெரும்பாலும் கிராமங்களில் இருந்தே தோன்றியுள்ளனர் என்று கூறுவர். கிராமம் அவர்களின் உருவாக்கத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது என்றே கூற வேண்டும்.

சிவசோதியின் ஆளுமை உருவாக்கத்திற்கு கரவெட்டிக் கிராமமும் பங்களிப்புச் செய்திருக்கிறது என்று துணிந்து கூறுவேன்.

இவரது கதைகளைப் படிக்கும்போது கரவெட்டியில் வாழ்ந்த காலங்களே நினைவுக்கு வருகின்றன. கடந்த முப்பது நாற்பது வருடங்களிலே கரவெட்டியின் வாழ்வியல் மாறியுள்ளது. அக்காலத் திலே 'பங்குனி என்று பருப்பதுமில்லைச் சித்திரையென்று சிறுப்பது மில்லை' என்றே இக்கிராமத்து மக்கள் வாழ்ந்தனர். இன்று இப்பண்பு பல்வேறு காரணிகளால் மாறிவிட்டது. மாற்றம் என்பது தவிர்க்க முடியாததது தான்.

சிவசோதியின் நினைவுகள் சுமந்து என்னும் தொகுதியிலே பத்துச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கதையும் ஒவ் வொரு விடயங்களை வலியுறுத்துகின்றன. கதைக்கரு, பாத்திரங்கள், உத்தி முதலானவை சிறப்பாக அமைந்துள்ளமை பாராட்டிற்குரியது..

அன்றாட வாழ்வின் அவலங்கள், மனஅவசங்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், கணவன் மனைவி உறவு விரிசல்கள், சமூக இயைபின்மை முதலான கருக்களை இவர் கவின் பெறக் கையாண்டுள்ளார்.

"ஐயா அடுப்படிக்குள் சென்று ஒரு கிண்ணத்தில் தண்ணிய எடுத்துக் கொண்டு போய் ஒரு கரித்துண்டை வாயில் போட்டு கடித்த படி ஆட்காட்டி விரலால் நாலைந்து தரம் இழுத்துத் தேய்த்து"

காட்சிப்படுத்தலாக அமையும் இப்பகுதி ஒரு காலத்தில் கரவெட்டியின் யதார்த்தம் இன்று மிக மிக அருகிய ஒரு காட்சியைச் சிவசோதி கண்முன் விரிய விட்டுள்ளார்.

சிவசோதி கையாளும் 'மொழி' இரு தளத்திலே செல்வதை இந்தக் கதைகளினூடு காண முடிகின்றது. பல்வேறு இடங்களிலே அசல் கிராமியப் பேச்சு வழக்கைக் கையாளும் இவர் இடையிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை மறந்து செந்நெறித் தமிழுக்குள்ளும் சென்று விடுகிறார்.

பேச்சுவழக்குத் தமிழ் அகராதி தொகுப்பவர்களுக்கு இவரது கதைகள் பெரிதும் உதவும். இன்று நாம் மறந்து போன பல பேச்சுவழக்குச் சொற்களைப், பண்பாட்டு அம்சங்களைத் தமது கதைகளினூடு பதிவு செய்துள்ளார். பழமொழிகள், மரபுத் தொடர்கள் முதலியன பாத்திரங்கள் வாயிலாக உயிர்ப்புடன் வெளிவருகின்றன.

அழகான பொருத்தமான உவமைகளைச் சிவசோதி அற்புதமாகக் கையாண்டுள்ளார். "அழகிய பச்சைக்கம்பளம் விரித்து அதில் வெள்ளைப் பஞ்சுகளைப் போட்டு விட்டது போல் வயலும் கொக்குகளும் காட்சி அளித்தன" இந்தக் காட்சியைக் கரவெட்டியிலே அறுவடைக்கு முந்திய காலத்திற் சாதாரணமாகக் காணலாம். சிவசோதிக்கு இயற்கையில் உள்ள ஈடுபாடு பல்வேறு இடங்களில் பதிவாகியுள்ளது.

இச்சிறுகதைத்தொகுதி தமிழ் மக்களின் குறிப்பாக வடமாரட்சிப் பகுதியின் பண்பாடு, மொழி, பழக்கவழக்கம், ஆட்பெயர்கள், ஆண் பெண் உறவுகள், உறவுமுறைச் சொற்கள், மனிதநேயம் முதலான பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பாத்திரங்களுக்கு இவர் சூட்டியுள்ள பெயர்களிற் பல இப்போது நடைமுறையில் இல்லை. 'கண்ணகை' என்ற பெயரை இப்போது காணமுடியாது. 'அம்மாச்சி' என்ற உறவுமுறைச் சொல்லைக் காண்பதே அரிது. இவ்வாறு பலவற்றைச் சிவசோதி பதிவு செய்துள்ளார்.

சிவசோதியிடம் ஒரு ஆற்றல் இருக்கிறது. இன்னும் வளர வேண்டிய பகுதிகளும் இல்லாமல் இல்லை. "தீட்டத் தீட்டத்தான் கூரும்" என்று கூறுவார்கள். சிவசோதி எழுத எழுத அந்தக் கூர்மை சிறப்பாக அமைந்துவிடும். எனது கிராமத்தில் இருந்து தோன்றிய சிறுகதை எழுத்தாளர்கள் வரிசையிலே சிவசோதியும் இடம்பிடித்துள்ளார். வாழ்த்துக்கள் இன்னும் வளருவதற்காக.

அன்புடன்<br>
பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா<br>
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்<br>
யாழ் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

காலம் ஓடிக்கொண்டிருக்கிறது.அது ஒரு போதும் தன் பயணத்தை நிறுத்தியதில்லை.மாற்றங்களை சுமந்தபடி பயணிக்கும் மனிதங்கள் விழி காணும் காட்சிகள் சில கலைந்து போகின்றன. ஆனாலும் மனதோடு உறவாடும் சில நினைவுகள்.

"அக்காளும்,தங்கையும் அயல்வீட்டுப் பிள்ளைகளுமாய் மகிழ்ந்து விளையாடிய முற்றங்களும்,காலாற நடந்து திரிந்த வயல்களும், நாள் முழுவதும் ஓயாது கதை பேசி மகிழ்ந்த மரநிழல்களும், வீழ்ந்து குளித்து எழுந்த குளங்களும், இப்போதும் மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்து அடிக்கடி விளித்துக் கொண்டு மேற்கிளம்பும் நினைவுகளாய்" இவையே எனது "நினைவுகள் சுமந்து" என மலர்கிறது.

"நினைவுகள் சுமந்தில்" சில என் கரவெட்டி கிராமத்தின் பதிவுகள், சில இன்றைய காலத்தின் யதார்த்தங்களை பேசுகின்றன. இப்பொழுது காணும் காட்சிகள் பல ஆண்டுகள் பின்னோக்கி எனை இழுத்துச் செல்கின்றன.இத்தகைய காட்சிகளை கண்டு ஆனந்த மடைய முடியுமே அன்றி சற்றும் தரிக்காத இயந்திர வாழ்க்கைக்குள் மனித பயணம் தொடர்கிறது.

நான் யா/கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியில் உயர்தரம் கல்வி கற்ற காலத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்ற காலத்திலும் எழுதிய கதைகளே இவை. மா.சிவா, கரவெட்டிமேற்கு என்ற பெயரில் பல்வேறு பத்திரிகைகளில் எனது கவிதைகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகளும் வெளியாகியிருந்தன. நீண்ட காலத்தின் பின் இக்கதைகளை நூலாக்கம் செய்யும் வாய்ப்பு இப்போதுதான் கிடைத்திருக்கின்றது. பள்ளிப் பருவத்தில் உயர்தரம் கற்ற காலத்தில் எனக்குள் இருந்த கவிதை நடையை எடுத்துக் காட்டி எனது எழுத்துப் பயணத்தை ஆரம்பித்து வைத்த ஆசிரியை நாளினி கணபதிப்பிள்ளை அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த "நினைவுகள் சுமந்து" மலரை நான் கேட்ட போது எனக்கு ஆதரவு நல்கி, இக்கதைகளைப் பாராட்டி எனக்குள் உள்ள நிறைகளையும், நான் தெரிந்து கொள்ள வேண்டியவற்றையும் எடுத்துரைத்த நண்பர் த.அஜந்தகுமார் அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றியுடையவன்.

இந்நூலுக்கு அணிந்துரை எழுத வேண்டும் என நினைத்த போது என் மனதில் நின்றவர், மதிப்பிற்குரிய எனது ஆசானாகிய திரு.எஸ்.சிவ லிங்கராஜா சேர் அவர்களே. அவர் கரவெட்டியில் பிறந்தவர். கரவெட்டி மண் வாசனையை என்றும் மறவாதவர், விரிவுரைகளை நடாத்திய காலங்களில் கிராமத்தினதும், கிராமத்தில் வாழ்கின்றவர்களைப் பற்றியும் அன்போடு விசாரிப்பது அவரது ஊரின் மீதான பற்றுதலை உணர்த்தியது. இந்த மண்ணில் பிறந்து வாழ்ந்து, அதன் பழக்கவழக்கங்கள், பண்பாடுகளில் ஆழ வேரூன்றிய எனது ஆசான் இந்நூலுக்கு அணிந்துரை எழுதியமையை இட்டு நான் மகிழ்கிறேன். என் குருவுக்கு என்றும் நன்றியுடையவன்.

இந் "நினைவுகள் சுமந்து" மலர்வதற்கு எனக்கு ஆரம்பத்தில் இருந்தே உந்துதல் அளித்த நண்பன் ரஜனி. எனது அன்பிற்குரிய க.இந்திரகுமார் அண்ணா அவர்கள். கதைகளின் ஆசிரியன் நானாக இருந்தாலும், "நினைவுகள் சுமந்து" நூல் வடிவம் பெற உதவிய ஜீவநதி ஆசிரியர் திரு.க.பரணீதரன் அவர்களுக்கும். பரணி அச்சுக் கூடத்தினருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

மா.சிவசோதி.

(மா.சிவா.கரவெட்டி மேற்கு)

சண்டில், மத்தொனி, கரவெட்டிமேற்கு, கரவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை பிறக்கட்டும்

அதிகாலை நேரம் காக்கைகளின் கரையும் சத்தம் காதைப்பிளக்கும். வேம்பிலும், மாவிலங்கம் மரத்திலும் அநேகமாக காக்கைகள் கூடு கட்டியிருந்தன பொழுதுபடும் வேளையிலும் விடியப்புறத்திலும் முற்றத்தில் கால் வைக்க முடியாது. பீச்சித்தள்ளிவிடும். பூவரசில் படுத்திருந்த சேவல் இறக்கைகளை அடித்துக்கொண்டு கூவியது. "படீர் படீர்" என்று தகரக்கூரையில் விழுந்து சுள்ளிகள் சத்தத்தை எழுப்பியது. வாலைச் சுருட்டிக்கொண்டு படுத்திருந்த வீமன் பட்டென்று விழித்துக்கொண்டு கொல்லைப் பக்கமாக வள் வள் என்று குலைத்துக்கொண்டு ஓடியது.

"ச்சீக் மூதேவி தலை மாட்டுக்க வந்து கத்துது" என்று சினந்தபடி எழுந்தார் ஐயா. நான் அப்பாவை ஐயா என்று தான் அழைப்பதுண்டு. இது எங்கட ஊரிலும் உள்ள வழக்கம். ஐயா எழுந்துவிட்டார். கிழக்கு வானத்தை ஒருமுறை பார்த்துவிட்டு அம்மாவை எழுப்பினார்.

"என்ன நிலவு காலிச்சிட்டிது தம்பிய எழுப்பிவிடன்" என்றார்.

"ஹம்" என்று முனகியபடி அம்மா எழுந்து அண்ணாவை எழுப்பினார்.

"ஐயா அடுப்படிக்குள் சென்று ஒரு கிண்ணத்தில் தண்ணிய எடுத்துக்கொண்டு போய் ஒரு கரித்துண்டை வாயில் போட்டு கடித்தபடி ஆட்காட்டி விரலால் நாலைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் இழுத்து தேய்த்து வாய் கொப்பளித்துவிட்டு" வந்தார். வலை பறி எடுத்துக்கொண்டு வந்து முற்றத்தில் வைத்தார் அம்மா. மறுபடி அடுக்களைக்குள் நுழைந்தாள். பனம் மட்டையும் ஓலையும் பொசுக் பொசுக்கென்று எரிந்தது. ஒரு செம்பில் தேத்தண்ணியும் எடுத்துக்கொண்டு வந்தாள்.

"சிவம் சிவம் இந்தா" என்று தேத்தண்ணியை நீட்டினாள். அம்மாவின் சத்தம் என் நித்திரையையும் குழப்பி விட்டது. மார்கழி மாதம் குளிர் தாங்கமுடியவில்லை. சரத்தால் மொட்டாக்கு போட்டபடி தேத்தண்ணி செம்பிற்கு பக்கத்தில் குந்தினேன்.

"என்ன என்ன" என்று ஐயா அழைத்ததும் அம்மா பாக்கு வெட்டியையும் சரையையும் எடுத்துக்கொண்டு போனார்.

"தம்பி எழும்பிவிட்டானோ" என்று மறுபடி கேட்டார்.

"ஓம் எழும்பிவிட்டான். வெளிக்குப்போயிட்டான் போல கிடக்கு" என்றாள் அம்மா.

நான் தேத்தண்ணி செம்பிற்கு பக்கத்தில் இருந்ததைப் பார்த்ததும் "தம்பி தேத்தண்ணி வேணுமண்டா குடி" என்றாள். நான் ஒரு கிளாசில் விட்டுக் குடித்தேன். இந்தக் குளிரிற்கு இது தேவையாகத்தான் இருந்தது.

"சிவம் நேற்று மாமி வந்தவா அந்தக்காப்பு விஷயமா" என்ற அம்மா இழுத்தாள்.

"ம்...ம்... பாப்பம் தை பிறக்கட்டும் மழை தண்ணி பெஞ்சா உழைப்பு நடக்கும். தானே குடுப்பம்" என்றார்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது அண்ணா வும் வந்துவிட்டான். சைக்கிள் கரியரில் வலை பறி எல்லாம் பொதிந்து கட்டப்பட்டது அம்மா படலைக்குப் போய் முழிவியலம் பார்த்தாள். ஐயா கடவுள் நம்பிக்கை அதிகம் இல்லாதவர். ஆனாலும் விபூதி அணிவார். விபூதி அணிந்து கொண்டு.

"அப்பனே கல்லறையானே நீதானப்பா" என்று வேண்டிக்கொண்டு சைக்கிளில் ஏறினார். சைக்கிள் பெருத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமத்தின் மத்தியில் விகடராமன் குதிரையாட்டம் ஊரத் தொடங்கியது.

"நான் அப்போது 6ம் வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தேன்" ஐயா தன் சொந்தத்திலேயே கலியாணம் செய்துவிட்டார். அதுவும் பதினைந்து வயசில் அம்மாவே இதைக் கூறியிருக்கிறார். நாங்கள் சகோதரர்கள் ஐந்து பேர். மூத்தது இரண்டு பெண்கள், அடுத்த அண்ணா அப்புறம் அக்கா பிறகு கடைக்குட்டியாய் நான். அம்மா சில வேளை களில் "இந்தப் பேத்தக்குட்டி பிறந்து தான் என்ர லட்சுமி எல்லாம் அழிச்சுப்போட்டுது" என்று சொல்லுவா அப்போது எனக்கு அவ்வளவாக புரிந்து கொள்ள முடியவி ல்லை. ஒரு வழியாக அக்காவுக்கு திருமணம் செய்து கொடுத் தாச்சு ஒரு சோடிக்காப்பு போடுவதாக கூறியிருந்தோம் அது சம்பந்தமாகத்தான் மாமி நேற்று வந்திருந்தா. அத்தான் நல்லவர் இது பற்றி எல்லாம் பேசமாட்டார். மாமி அப்படி யல்ல மெத்த சிக்கனம் எச்சில் கையாலும் காகம் துரத்த மாட்டா" என்று அம்மா கூறக்கேட்டிருந்தேன்.

ஐயாவின் தொழில் சிறுகடற்தொழில் தான். எங்கள் ஊரில் உள்ள வேறொருவரிடம் இருபது பரப்பு வயலையும் குத்தகைக்கு எடுத்து நெல் விதைப்பதும் உண்டு. சில காலம் நல்ல வருமானம் சில வேளை இயற்கை எம்மை ஏமாற்றியும் விடும்.

எங்கள் ஊரில் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று ஒரு அபரிமிதமான நம்பிக்கை. அதற்கு காரணமும் இருந்தது. தை பிறந்தால் வயல்கள் அறுவடையாகும். விட்டதைப் பிடித்து விடலாம். ஆறுகள் நீர் இருக்கும் மீன்கள் அதிகம் பிடிக்கலாம் சில காலங்களில் மாதக் கணக்கில் நல்ல வருவாயும் இருக்கும். ஊரில் பல குடும்பங்கள் நல்லதுகளை நிச்சயம் பண்ணிவிட்டு காத்திருப்பர். தை பிறக்கட்டும் என்று.

அக்காவின் திருமணத்திற்கு பட்ட கடன் வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி தன் தலையைக் காட்டிக்கொண்டு நின்றது. அண்ணா பாதியில் படிப்பை விட்டுவிட்டான். வாசிக்கத் தெரிந்தால் மட்டும் போது என்றளவுக்கு அவர்கள் படிப்பு இருந்தது. அக்காக்கள் கதைப்புத்தகங்கள் படிப்பார் கள். அதிலும் ரமணிச்சந்திரன் கதைகள் தான் அதிகம். புத்தகங்கள் அடுக்கடுக்காய் குவிந்திருக்கும். நான் அந்தப் பக்கம் தலை காட்டுவதில்லை எப்போதாவது மாயாவிக் கதைகள் கிடைத் தால் ஆவலோடு வாசிப்பேன். அப்பு அடிக்கடி சொல்லுவார்.

"இவன் கெட்ட குடிக்கு ஒரு கேட்டை, கேட்டை கோட்டை ஆளும் என்று" நான் உதட்டளவில் புன்னகைத்து விட்டு ஓடி விடுவேன்.

அப்போது நான் சின்னப்பையன் தான். அப்பு அநேகமாக வீட்டில் தான் இருப்பார். தன்னுடைய வீரப் பிரதாபங்களை எல்லாம் சொல்லுவார். கூத்து ஆடுவதில் தன்னை ஒரு கெட்டிக்காரன் என்பார். காத்தான் பாட்டுக் களை எடுத்து விடுவார் நான் கேட்டுக்கொண்டே இருப் பேன். கொட்டப்பெட்டியில் இருக்கும் சில்லறைகளை தருவார். கொட்டப்பெட்டி என்றால் பனையோலையால் ஆன பல அடுக்குகள் கொண்ட மூடித்திறக்கக்கூடியதாக இருக்கும். அப்பு தன் பரம்பரைப் பெருமைகளை அளந்து விடுவார். நிமிர்ந்து படுத்தபடி காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு காத்தான், மயானகாண்டம் என்று அடுக்கிக் கொண்டே போவார். சிலநேரங்களில் அப்புவின் தேவை அதிக மாகி விடும். வீட்டில் யாரேனும் எங்காவது கிளம்பி விட்டா போதும் "அத எடுத்து வை" இத எடுத்து வை என்று புறு புறுத்துக்கொண்டிருப்பார். சில சமயம் வீட்டுக்கு நாங்கள் யாரேனும் வரும் வரை அப்புதான் வைரவர் மாதிரி காவல் இருப்பார். யாரேனும் படலையைத் திறந்தால் "யாரடா அது" என்று அதிர வைத்து விடுவார். வீட்டுக்கு ஒரு கிழம் இருக்க வேணும் இதை எங்களுக்கு அப்பு தீர்த்து வைத்தார்.

அன்று சனிக்கிழமை அதனால் சற்று தாமதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழலாம் என்று உறங்கினேன்.

"டேய் என்னடா இவ்வளவு நேரமா தூங்கிறாய்" என்று அண்ணன் தொடையில் நுள்ளினான்.

"வாடா வா வயல் பக்கம் போவம்" என்று கூறினான் கேட்டது தான் தாமதம் அவசர அவசரமாக கிளம்பினேன்.

"வா வா" என்று அண்ணனை அவசரப்படுத்தினேன் அம்மா சினந்தாள். சாப்பிட்டு முடிந்ததும் வயலுக்குப் புறப்பட்டுப் போனோம் சைக்கிள் வாரில் நான் குட்டி நாயாட்டம் குந்திக்கொண்டேன் அண்ணாதான் சாரதி.

மார்கழி மாதம் வயல் பச்சை பசேல் என்றிருந்தது. கதிர்கள் குடலையில் இருந்து வெளிவந்து தன் தலையைக் காட்டிக்கொண்டு நின்றது. சில செம்மஞ்சள் நிறத்திலும் இருந்தன. அண்ணாவின் கைகளைப் பிடித்தவாறே வரம்பில் நடந்து கொண்டிருந்தேன். அண்ணா வரப்பில் நின்ற கிடைச்சிகளையும் புல்லுகளையும் பிடுங்கி எடுத்தான் எங்கள் ஆட்டுக்குட்டிக்கு இது ரொம்பப் பிடிக்கும். "அழகிய பச்சைக் கம்பளம் விரித்து அதில் வெள்ளைப் பஞ்சுகளை போட்டு விட்டது போல் வயலும் கொக்குகளும் காட்சி யளித்தன." சற்றுத் தள்ளி நிற்கும் பனங்கூடல் கம்பீரமாய் காட்சியளித்தது. அடிவானம் செங்கம்பள வரவேற்பு செய்து கொண்டிருந்தது. என் சின்ன விழிகளுக்குள் இயற்கையின் எழிலை அடக்க முடியாமல் என் மனமும் கண்களும் ஆடு போல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் மேய்ந்து கொண்டிருந்தது.

அண்ணா சிறிய புல்லுக்கட்டை தோளில் வைத்துக் கொண்டு "தம்பி வா போவம்" என்றான்.

"அண்ணா இந்த முறை நல்ல நெல்லு விளைஞ்சிருக்கு" என்ற ஆனந்தத்தில் கூறினேன்.

"ஓம் நடவடா" என்று சொல்லிக்கொண்டு என் பின்னாலேயே வந்தான். மீண்டும் புல்லுக்கட்டை சைக்கிள் கரியரில் கட்டிவிட்டு என்னையும் ஏற்றினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இரவு நான் படித்துக்கொண்டிருந்தேன் நான் சத்தமாக படிப்பேன் அக்காச்சி என்னை சீண்டுவாள் அவளுக்கு நான் சத்தமாக படிப்பது பிடிக்காது. ஐயா பிலிப்ஸ் ரேடியோவை எடுத்துத் திருகினார். நீண்ட இரைச்சலுக்குப் பின் மெல்லிய குரல் வெளிவந்தது ஊரில் டிவியில் பார்த்த அதே மெட்டுத்தான் ஒலித்துக்கொண்டிருந்தது. அம்மா ஐயாவுக்கு சாப்பாடு கொண்டு வந்து வைத்தாள் ஐயா சாப்பிட்டுக்கொண்டே அம்மாவிடம்.

"வயல் நெல்லும் பரவாயில்லை கடவுளே எண்டு மழை இனிப்பெய்யாட்டி எல்லாம் தப்பி விடும்" என்றார்.

"இனி மழை பெய்யாது" என்றாள் அம்மா.

"என்னமோ அவள் பெட்டையின்ர காப்பாக் குடுத்திட்டா பிறகு பார்க்கலாம்" என்றார் ஐயா.

"அதுவும் இனி மாசி பங்குனிக்குத்தானே" என்று சலித்துக்கொண்டாள் அம்மா. அக்காவின் குடும்பத்தில் இதையிட்டு ஏதும் பிரச்சினை வந்திடுமோ என்ற பயம் அவவுக்கு.

நான் படித்து முடித்ததும் காற்சட்டையைக் கழற்றிப் போட்டு விட்டு என்னுடைய சிறிய சரத்துண்டை கட்டுவேன். அப்பு சில சமயம் என் சரத்தை இழுத்து விடுவார். அவருக்கு இது ஒரு பொழுதுபோக்கு எப்போதும் என்னுடன் பிரச்சினை செய்வது வழக்கம். என் சரம் கை நழுவும் போது விழுந்து விழுந்து சிரிப்பார். எனக்கு கோபம் வரும். அவருக்குத் தெரியும் அது பொய்க்கோபம் என்று.

அன்று இரவு ஆழந்த உறக்கத்தில் இருந்தேன் "படீர்" என்று கூரையில் ஏதோ விழும் சத்தம். திடீரென வீசிய காற்று மாவிலங்கம் மரக்கொப்புகள் முறிந்து விழுந்தது. காற்று சற்று பலமாக வீசியது பேயாக சுழன்றடித்தது. யன்னல் கதவுகளும் கிடுகுச் செத்தைகளும் பட பட என்று அடித்துக் கொண்டது. அரிக்கன் லாம்பு அணைந்து விட்டது. அந்த கார இருளில் அகப்பட்டோம். தகரக் கூரையில் சிறிது சிறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக மழைத்துளிகள் வீழ்ந்தன. ஐயா விசுக்கென்று எழும்பி முற்றத்தில் காயப்போட்டிருந்த வலைகளையும் உடுப்புகளை யும் அள்ளிக்கொண்டு வந்து மாலுக்குள் போட்டார். வீட்டில் ஓரமாக அமைக்கப்பட்டி ருந்த சரிவான அடைப்புக் கள் பெரிதுமற்ற சாணத்தினால் மெழுகப்பட்ட அறையை நாங்கள் மால் எனவும் சாப்பு எனவும் சொல்வதுண்டு.

காற்றும் சுழன்று வீசியடித்தது. இடையிடையே மழையும் சோவென இரைந்தபடி பெய்துகொண்டிருந்தது. குளிர்காற்று சில்லென்றிருந்தது. கடும் மழை பெய்யத் தொடங்கியது. துவானம் உடலை நனைத்த படி இருந்தது. அம்மா எழுந்து கைவிளக்கை கொழுத்த முயன்று கொண்டி ருந்தாள். அந்த முயற்சி அநேக தடவைகள் தோற்றுப்போய் விட்டது. சுழன்று அடிக்கும் காற்று அணைத்துக் கொண்டி ருந்தது. மீண்டும் மீண்டும் முயன்று அம்மா தோற்றுப்போய் விட்டாள். ஏழையின் வாழ்வில் ஏற்றப்படும் விளக்குகள் இப்படித்தான் சில காலங்கள் அணைவதும் மீண்டும் ஏற்றுவதும் வழமையாகிப்போன ஒன்று தான்.

நீண்ட நேரமாகியும் மழை நிற்கவில்லை விடிய விடிய கொட்டிக்கொண்டே இருந்தது. ஐயாவும் அம்மாவும் விடியும் வரை உறங்கவில்லை. ஏதோ பேசிக்கொண்டே இருந்தவர்கள். நிச்சயமாக அவை அக்காவின் வளையல் பற்றியதாகவே இருந்தன.

பொழுது விடிந்து விட்டது. மழை விடவில்லை காற்றும் தன் சக்தியைக் காட்டிகொண்டிருந்தது.

"அது மேகம் புண்டு ஊத்துது" என்று அப்பு சொல்லி விட்டு சுவர் மூலைக்குள் முடங்கிக்கொண்டார். அடுப்படி எல்லாம் தண்ணி ஊறிவிட்டது.

"தேத்தண்ணி கூட வைக்க முடியாது விறகு தடி யெல்லாம் நனைஞ்சு போச்சு" என்று அம்மா சொல்லிக் கொண்டு வந்து வாசலருகில் உட்கார்ந்து வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நேரத்திற்கு விறகு அம்மா மறுபடி எழுந்து அடுப்படிக்குள் போனாள். பகீரதப்பிரயத்தனம் செய்து ஒரு செம்பு நிறைய தேத்தண்ணியுடன் வந்தாள்.

பேணியில் இருந்த அரிசிமாவை ஒரு கிண்ணத்தில் போட்டுக்கொஞ்சம் சீனியும் தேங்காய்ப்பூவும், தூவினாள் பிரட்டி எடுத்து ஒரு பிடி தந்தாள். தேத்தண்ணியும் ஒரு கிளாசில் வந்தது. தேத்தண்ணி ஓலைப்புகை நாற்றத்தை நாசியில் சேர்த்தது. அத்தோடு எல்லோருக்கும் காலை உணவு முடிந்தது. ஐயா வயலைப் பார்க்க எண்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு போனார் ஒரு இடமும் வெளிக்கிட முடியாது. மழை தூறிக்கொண்டே இருந்தது. மாலை நெருங்கிக்கொண்டி ருந்தது. தோய்ந்து வடிந்தவாறு ஐயா வீட்டுக்கு வந்து சேர்ந்தார். தலையெல்லாம் துடைத்துக் கொண்டு சரத்தைக் கட்டியபடி சாய்மனைக் கட்டிலில் படுத்துக்கொண்டார்.

"என்ன என்ன சிவம் என்ன" என்ற அம்மா கேட்டாள்

"எல்லா இடமும் தண்ணி முட்டிக்கொண்டு கிடக்கு நான் நினைக்கிறன் இந்த முறை விதை நெல்லும் வராது" என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

அம்மா வந்து வாசலில் குந்தினாள். அப்பாவின் முகத்தைப் பார்த்தாள்.

"என்னப்பா செய்யிறது இந்த வருசமெண்டாலும் பெட்டையின்ர காப்பைக் குடுக்காட்டி எவ்வளவு பிரச்சினை" என்றாள்.

"மாமி வந்தாவெண்டால் சொல்லுவம் மேலக்குப் பார்ப்பம் என்று" கண் கலங்கினார்.

அம்மா எழுந்து போனாள், இரவுச்சாப்பாட்டுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று மூடியிருந்த கோதுமைப் பேணியைத் திறந்தாள். அது காலியாகவே இருந்தது.

"கறை படியாத எங்கள் மனங்களைப் போல"

– மித்திரன் வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்காச்சி வந்தா

மணி பத்தைக் கடந்து விட்டது. ஊரே உறங்கிப் போய்விட்டது. ஆனாலும் இரவின் நிசப்தத்தைக் கிழித்தபடி சந்தியில் நின்ற தெரு நாய்கள் ஒன்றை ஒன்ற கடித்து துரத்திக்கொண்டு குச்சொழுங்கைக்குள் ஓடியது. முற்றத்தில் வேம்பின் கீழ் படுத்திருந்த குஞ்சியன் "அடி அடி" என்று துரத்திக்கொண்டிருந்தார். அம்மாச்சியின் தலைமாட்டில் இருந்த படி அம்மா சொன்னாள்.

"அது மனுஷி எப்பவும் மூத்தவள், மூத்தவள் எண்டு தான் கதைக்கும் அவள் வராம இந்தக் கட்டை வேகாது என்று அடிக்கடி சொல்லும்"

"ஹ்ம் இந்த மனுஷியும் எப்பவும் உன்ர மோளோட தான் இருக்கும்" என்ற ஆமோதித்தாள் பார்வதியக்கா.

நான் அம்மாவைப் பார்த்தேன். கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது.

"தம்பி போய் ஏதும் வேண்டி சாப்பிடன்" என்றாள்

"இல்லையம்மா எனக்கு பசிக்கேல்ல" என்ற கூறி விட்டு வேம்பின் கீழ் படுத்திருந்த குஞ்சியனுக்கு பக்கத்தில் வந்து ஒரு சரத்தைப் போட்டு படுத்தேன். இதமான காற்று மேனியில் ஊர்ந்தது. ஒரு குளிர்ச்சியையும் தந்தது. பெரிய மாமாவும், பெரியப்பாவும் மாமியும் வாசற்படியில் இருந்த படி கதைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

"இந்தப் பெட்டை ஒருக்கா எண்டாலும் வந்துட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனா இந்த மனுஷியும் போய்ச் சேர்ந்திடும்" என்று கூறி பெரு மூச்சு விட்டார் மாமி. மாமாவும் அதற்கு ஒத்து ஊதினார்.

அக்காச்சி எங்களுக்கு மூத்தவள் நாங்கள் ஏழுபேர் அக்காச்சிதான் எல்லாம் அக்காச்சியைப் பெத்தது ஏனோ அம்மா தான். ஆனா வளர்த்தது அம்மாச்சி தான். "கிட்ட இருந்தா முட்டப்பகை" என்ற எங்கள் வீட்டில் இருந்து சற்றுத் தள்ளியே அம்மாச்சி இருந்தா. அக்காச்சி எப்போதும் அம்மாச்சி யுடன் தான். தண்ணி எடுக்கப்போனாலும், நெல்லுப் பொறுக்கு போனாலும், புழுங்கல் காயா விட்டாலும் நெல்லுக் குத்தினாலும் அக்காச்சி தான் எல்லாம் அம்மாச்சி என்ன தேடினாலும் அக்காச்சிக்கு கொடுத்துத் தான் கிடைக்கும்.

அம்மாச்சி எப்பவும் சுறுசுறுப்பா இருப்பா. எப்பவும் காலையில் பச்சமிளகாயும், பழஞ்சோறும் தான் தின்பா. பார்க்க பார்க்க எனக்கு கண்களில் நீர் வரும். பழஞ்சோற்றுத் தண்ணிய மூக்குப்பேணியில் விட்டுத்தருவா. குடிக்கும் போது வயிறு குளிரும் ஒடியல் பிட்டும், வெள்ளைச் சம்பலும், மரவள்ளிக்கிழங்கும், சம்பலும் என சாப்பாடு ஒரு கனதியாகவே இருக்கும். எழுபது வயதாகியும் இந்தக் கிழடு இப்படி இருக்கிறது என்ற ஊரவர்கள் கூட கதைப்பார்கள்.

இரவு ஆகிவிட்டால் எங்களை ஒரு இடமும் போக விடமாட்டா. சும்மா இருக்கமாட்டா எப்ப பார்த்தாலும் ஏதாவது செய்து கொண்டு தான் இருப்பா. கைகால் நோ என்றாலும் வேம்பு, பாவட்டை, ஆமணக்கு குழைகளை அவித்து உருவி விடுவா எல்லாம் குணமாகி விடும்.

அக்காச்சி நல்லவா காலையில முத்தங்கூட்டினாலும், தேத்தண்ணி போட்டாலும், சட்டி பானை கழுவினாலும், அக்காச்சி தான் எல்லாம். நானும் அக்காவும் பள்ளி போற தின்னாலும் வெளிக்கிடுத்தி விடுவா. "எங்கள் வீட்டுக்குட்டி ராணி எங்கள் அக்காச்சி" தான். அன்றைக்கு திங்கட்கிழமை அதி காலையில் எழுந்தேன். அக்காச்சியின் அரவம் இல்லாமல் இருந்தது. சில சமயம் அக்காச்சி அம்மாச்சியின் வீட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருப்பா என்று பள்ளிக் கூடத்துக்கு கிளம்பிப் போய் விட்டேன்.

நான் பள்ளிக்கூடம் முடித்து வீடு திரும்பினேன். வீட்டுக்குப் பக்கத்தில் வந்திருப்பேன். என் வீட்டை அண்டி சனங்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். எனக்குக் கலக்கமாக இருந்தது. குஞ்சொழுங்கையில் போய் பொட்டுக் கால் வீட்டுக்குள் சென்றேன். அம்மாச்சி பாயில் படுத்திருந் தாள். சுற்றி வர மாமி, அம்மா, பார்வதி அக்கா, பெரிய மாமா என ஒரு கூட்டம் இருந்தது. அம்மாச்சி இப்படி படுத்து நான் பார்த்ததில்லை. வெகு சிரமப்பட்டு என்னைத் திரும்பிப் பார்த் தாள். அந்தப் பார்வை கல் நெஞ்சையும் கரைச்சுப்போடும். என் கண்களில் கண்ணீர் அவை நிலத்திலும் வீழ்ந்து முத்துக்களாய் சிதறின. எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. சின்னக்கா ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதாள்.

"என்னக்கா என்ன" என்று அழுதபடி கேட்டேன்.

"நீ வா" என்று என்னை வீட்டுக்குள் இழுத்துச் சென்றாள் சின்னக்கா.

"டேய் அக்காச்சி வீட்டுக்கு தெரியாம கலியாணம் செய்திட்டா" வீட்டை விட்டுப்போயிட்டா. அம்மாச்சி கேட்டதும் ஏலாம படுத்துட்டா" என்றாள்.

"அக்கா அக்காச்சி எங்க இருக்கிறாவாம்" என்ற மறுபடி கேட்டேன்.

"தெரியயேல்லடா அப்பாவும் குஞ்சியனும் தேடிப் போயிட்டினம்" என்றாள்.

அம்மாச்சி அடிக்கடி திரும்பி வாசல்வரை பார்ப்பதும் கைகளை தூக்கிக் காட்டுவதுமாக இருந்தாள். அவள் அக்காச்சியைத் தேடிக்கொண்டிருந்தாள். பொழுதுபட்டு ஆளையால் தெரியாத இருட்டு வீட்டில் விளக்கேற்ற வில்லை. அரிக்கன் லாம்புதான் சில சமயம் கைவிளக்கும். அப்பாவும் குஞ்சியனும் வாசலில் வரும் சத்தம் கேட்டது. அம்மா எழுந்து வாசலுக்கு ஓடினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன என்ன என்று பதறியடித்துக்கொண்டு கேட்டாள்"

"ஒண்டுமில்ல அவள் போயிட்டாள் இனி கை கழுவி விட வேண்டியது தான்" என்று சினந்தார் அப்பா.

"சின்னவள் சின்னவள்" என்ற அப்பா கூப்பிட்டார். அக்கா எழுந்து வாசலுக்கு ஓடினாள்.

"போய் வீட்டுக்கு விளக்கு வை அதுக்கும் அவள் வருவள் எண்டு நிக்கிறியோ" என்று சினந்தார்.

சின்னக்கா வீட்டுக்குள் ஓடினாள். அம்மாச்சி தலையை அசைத்து யாரையோ கூப்பிடுவது போல் இருந்தது. அம்மா கிட்டப்போய் உட்கார்ந்தாள். காதுக்குப் பக்கத்தில் போய் நடந்ததைச் சொன்னாள். அம்மாச்சியின் கண்களில் கண்ணீர் வழிந்தது. தலையில் கையால் அடித்தாள். அன்றைக்கு படுத்தவதான் இன்று வரைக்கும் எழுந்திருக்கவில்லை. பல மாதங்களாகிவிட்டது. இப்ப பேச்சில்லை, ஆட்டம் அசை வில்லை. உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. பரியாரியார் பார்த்துச் சொல்லிப் போட்டார். இண்டைக்கு இல்ல நாளைக்கு எண்டு. அக்காச்சியை பார்க்கவே இழுத்துக் கொண்டு கிடந்தது.

"புள்ள ஒருக்கா உன்ர மோளுக்கு சொல்லி அனுப்புங் கோவன்" என்று வாய்மொழிந்தார் மீனாட்சியக்கா அவ எங்கட வீடு கடந்து இருப்பவ. என்ன நன்மை தீமை எண்டாலும் வருவா. எங்களோடு நெருக்கமான உறவைப் பேணுகின்றவா. ஆனால் எங்கட சாதி சனம் இல்ல பிள்ளையல் எல்லாம் வெளிநாட்டில் இருக்கினம் என்ன உதவி எண்டாலும் நாங்கள் தான் செய்வம். மீனாட்சி அக்கா இப்படிக் கூறியதும் அப்பா "அர்ச்சுனன் போல் வில்லை எடு அம்பை விடு" என்று சினந்தெழுந்தார்.

"இஞ்ச வாடா தம்பி ஆயிரம் தான் நீ சொன்னாலும் அவளும் உன்ர மோள் தான். அவளின்ர பலன் இப்படி நடந்திட்டுது" பிறகு சந்தோசமா கொண்டாடா விட்டாலும் நல்லது கெட்டதுக்காவது அவளுக்கு சொல்லு" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மீனாட்சி அக்காவின் குரல் ஓங்கியது.

"அக்காத்த இன்னும் இரண்டு இருக்கு நான் கரை சேர்க்கோணும்" இப்ப இவள சேர்த்த எங்கட சாதி சனம் என்ன நினைக்கும்" என்றார்.

"சரியடா தம்பி நீ எனக்காக ஒருக்க சொல்லி அனுப்பு" வந்துட்டுப் போகட்டும் என்று அதட்டினார் மீனாட்சியக்கா.

"சரி அக்காத்த நான் போமாட்டன் யாரெண்டாலும் போகட்டும்" என்று அடங்கினார் அப்பா.

"டேய் உன்னைவிட இந்தக் கிழடுதான் அவளிடம் நல்ல பட்சமாயிருந்தது. அது மனுஷி தன்ர உயிர் போறதுக்குள்ள அவளைப் பார்க்க வேணும் எண்டு நினைக்குது போல" என்றாள்.

"அதுக்கு நான் என்ன செய்ய" என்று கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

"நீ ஒண்டும் செய்ய வேண்டாம் யாரையாவது அனுப்பி அவளைக் கூப்பிடு" என்று முடிவாக சொன்னார் மீனாட்சி அக்கா.

அக்காச்சி தங்க நிறம் உயர்ந்தவள். வசீகரமான தோற்றம் பார்ப்பவரை சுண்டி இழுக்கும். ஒரு அழகி 'அவள் எங்கள் வீட்டுக் குட்டி ராணி' என்று அம்மாச்சி அடிக்கடி சொல்லுவா. கோயில் குளம் போறதெண்டால் பட்டுக் கட்டிக் கொண்டு 'ஒரு மகாலட்சுமி போல' காட்சி தருவாள். எங்கள் வீட்டார் எல்லோரும் அக்காச்சியின் மீது கொள்ளை அன்பு அதுதான் அவள் பிரிவில் இப்படிக் கோபமும் கொதிப்பும்.

அப்போது மாமாவின் திருமணம் நடந்து கொண்டிருந்தது அந்த நிகழ்வில் தான் மாமாவின் பள்ளிக்கால நண்பர்களும் வந்திருந்தனர் அவர்களில் கமலன் அண்ணாவும் ஒருவர். ஆள் பார்ப்பதற்கு வாட்டசாட்டமாக இருப்பார். கொஞ்சம் கருப்பு தான் "ஆனை கருத்தாலும் ஆயிரம் பொன் பெறும்" என்று அம்மாச்சி சொல்லுவா அக்காவின் விஷயம் வீட்டுக்குத் தெரிந்தது. எங்கள் வீட்டிற்கு ஒத்து வராது என்று அடிக்கடி அப்பா சொன்னார் இதையும் தாண்டி வளர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது அக்காச்சியின் காதல். அப்பாவும் அவர் சகோதரர்கள் எல்லாம் சாதி சனத்தோட அண்டி இருந்தவ யாரும் கலப்புத் திருமணம் செய்யவில்லை. இதனால் தானோ என்னவோ அக்காவின் காதலுக்கும் போர்க்கொடி தூக்கப்பட்டது.

அக்காச்சிக்கு தூது அனுப்பும் படலம் தொடங்கியது. எங்கள் சார்பில் கிருஸ்ணன் குஞ்சியன் தான் எது நடந்தாலும். குஞ்சியன் இல்லாம வீட்டில் ஒன்றும் நடக்காது. எல்லாத்தையும் அவரே பார்த்துக்கொண்டார். எப்போதும் தராசுக் கோல் போல் இருப்பார். நியாயம் எதுவோ அதையோ பேசுவார். எனக்குத் தெரியும் அக்காச்சியின் பிரிவு அவருக்கும் உண்டென்று.

அன்று இரவு பத்து மணியிருக்கும் நல்லஉறக்கத்தில் இருந்தேன். அம்மா குழறும் சத்தம் கேட்டது. காதில் கணிரென்றது. பக்கத்திலே படுத்திருந்த அப்பாவை இறுக்கிப் பிடித்துக்கொண்டேன். கண்ணை திறக்கவில்லை. பயமாக இருந்தது. எல்லோரும் பதறி அடித்துக்கொண்டு எழுந்தனர். அம்மாச்சியை சுற்றி இருந்தனர் இப்படித்தான் ஒரு முறை. எங்கள் ஊரில் இருந்து இடம்பெயர்ந்து ஒரு இடத்தில் சில மாதம் இருக்க நேர்ந்தது. அப்போது இந்திய இராணுவம் இருந்தது. கடலால வாறாங்கள். வெட்டு வாங்கள் என்ற அடிக்கடி கதைக்க கேட்டிருந்தேன். அதே நினைப்போட நித்திரைக்குப்போனன். நடுச்சாமம் தூக்கம் கலையவே கண் விழித்தேன் வீட்டுக்கு மூலைக்குள் ஒரு உருவம் பார்த்ததும் ஐயோ என்று குழறினேன். அக்கம் பக்கம் படுத்திருந்த அம்மா, மாமி என எல்லோருக்கும் சேர்ந்து குழறினார்கள். ஊரே அதிர்ந்து விட்டது. வெளியில் படுத்திருந்த மாமா, அப்பு எல்லோரும் ஓடி வந்தார்கள். ஒன்றும் இல்லை உண்மையில் வீட்டு மூலையில் கிடந்தது சம்புப்பாய் அதைப் பார்த்து நான் கத்த. ஆமி வந்திட்டானோ என்று பயத்தில் எல்லோரும் சேர்ந்து கத்தினார்கள். அன்று முழுவதும் அது பெரும் கதையாகி விட்டது. மெதுவாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை திறந்தேன் அம்மாச்சிக்கு எந்த ஆட்டம் அசைவும் இல்லை. ஆள் முடிஞ்சிது எண்டு தான் நினைத்தோம்.

பொன்னிப்பேத்தியைக் கூட்டிவர ஆள் அனுப்பப் பட்டது. அவதான் எங்கள் ஊரில் நாடி பிடித்துப் பார்த்து என்ன ஏது எண்டு சொல்லுவா. நல்லது கெட்டது என்றால் முதலில் பிரசன்னமாகிவிடுவா. படித்துப்பட்டம் பெற வில்லை. கண்ணூறு, நாவூறு எல்லாம் அவ பார்க்க குணமாகும். நாலைந்து செத்தலையும், உப்பையும் எடுத்து தலையை தடவி. உடம்பு முழுவதும் தடவுவா. பிறகு ஓலையில் போட்டு எரிப்பா. அந்த நீறை எடுத்து தலையிலும் உள்ளங்காலிலும் பூசுவா. எல்லாம் சரியாகிவிடும். இன்றும் எம்மோடு இருக்கம் பாரம்பரியம் திரும்பிப்பார்க்க மனம் இன்றி திசைமாறும் உலகம்.

பொன்னிப்பேத்தி வந்தா சுற்றி இருந்தவர்கள் விலகி இடம்கொடுத்தார்கள். ஒருமுறை கும்பிட்டுவிட்டு கையைப் பிடித்துப் பார்த்தா, உள்ளங்காலை தொட்டுப்பார்த்தா. மூன்று முறை கூப்பிட்டுப்பார்த்தா. எந்தச் சலனமும் இல்லை. உடம்மை தொட்டுப்பார்த்து போட்டு "கிழவி போய்ச் சேர்ந்திட்டுது" என்றார். எல்லோரும் ஒருமுறை கத்தினார் கள். ஐயோ ஐயோ என்ற குழறினர். அப்பா, மாமா குஞ்சியன் எல்லோரும் ஓடி வந்தார்கள். அம்மாச்சியை தூக்கி வீட்டுக்கோலில் கட்டிலில் கிடத்தினார்கள். தலைமாட்டில் குத்து விளக்கு ஏற்றப்பட்டது. கால் கட்டப்பட்டது. அம்மா, மாமி அக்கா என எல்லோரும் சுற்றி வர இருந்து அழுதார்கள்.

"எட மோன ரெண்டு பொடியள பிடிச்சு அறிவிச்சு விடு நாணளக்கு வேளையோட எடுத்திடலாம்" என்றார் சின்னண்ணன்.

இளவறிவிக்கவென்று இரண்டு பொடியளப் பிடித்து வந்தனர். "தம்பி எங்கட சாதிசனம் எல்லா இடமும் இருக்கினம் ஒரு தரையும் விடாம சொல்லுங்கோ" என்ற அப்பா கூறினார்.

நிலம் வெளுத்து விட்டது. பகலவன் தன் பயணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி விட்டான். வீட்டில் எல்லோரும் அம்மாச்சியின் உடலைச் சுற்றி அழுதுகொண்டிருந்தார்கள். பூவரச மரங்கள் வெட்டி ஏற்றப்பட்டது. சுடலைக்கும் ஆட்கள் அனுப்பப் பட்டனர். ஐயர் வந்தால் சரி என்று சின்னண்ணன் கூறினார். சின்னண்ணன் ஊரில் எது நடந்தாலும் முன்னின்று நடத்து வார். தம்பி நீதான் எல்லாத்தையும் செய் என்றால் தானே முன்னின்று எல்லாத்தையும் செய்வார். சற்று நேரத்திற் கெல்லாம் ஐயர் வந்துவிட்டார். கிரிகைகள் தொடங்கியது.

அம்மாச்சியின் மச்சாள்மார், மச்சான்மார் முறைக்காக குடம் குடமாக தண்ணி சுமந்தார்கள். அம்மாச்சி குளிப்பாட்டப்பட்டாள் அலங்காரம் செய்து கட்டிலில் கொண்டு வந்து கிடத்தினார்கள்.

"பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் வாங்கோ" என்ற சின்னண்ணை ஓலமிட்டார்.

நானும் சின்னக்காவும் நெய்ப்பந்தம் பிடித்தோம் என் மச்சான் மாரும், மச்சாள் மாரும் நின்றார்கள். நான் வீதி வழியே பார்த்துக்கொண்டிருக்கிறேன். அம்மாச்சிய தூக்கப்போயினம் இன்னும் அக்காவை காணவில்லை. எப்படியாவது என் அக்காச்சி வந்திடுவா என்று அடிக்கடி தெருவையே பார்த்தேன்.

"ஏன்ரி அவள் மூத்த பெட்டை வரேல்லியோ" என்ற அருகில் இருந்தவர்கள் குசுகுசுத்துக்கொண்டிருந்தார்கள் என் காதில் கணீரென்று ஒலித்தது.

தேவாரம் பாடி முடிந்தது.

"தூக்குங்கோ தூக்குங்கோ" என்று சின்னண்ணை மறு படி ஒரு காட்டுக் கத்துக்கத்தினார். வீட்டார் அம்மாச்சியை தூக்க விடாம நின்று அழுதார்கள். பாடையோடு தூக்கி வந்து பல்லக்கில் கிடத்தினார்கள். அம்மாச்சியின் பயணம் தொடங்கியது. பெண்கள் வண்டியை சுற்றி சுற்றி மூன்று முறை அழுதார்கள்.

"சரி சரி" என்ற மறுபடியும் சின்னண்ணன் சொல்லி விட்டு வண்டியைத்தள்ளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி எழுப்பியபடி ஒரு கார் வந்து நின்றது. "ஐயோ கொஞ்சம் பொறுங்கோ" பெட்டை வந்திட்டாள் என்று பார்வதியக்கா கத்தினாள்.

சுற்றி நின்றவரை விலக்கியபடி அக்காச்சி என் அக்காச்சி ஓடி வந்தாள். வண்டிலின் மேலால் அம்மாச்சியின் முகத்தினில் கைவைத்து கதறினாள். அம்மா, மாமி, சின்னக்காவும் அக்காச்சியைக் கட்டிப்பிடித்து அழுதார்கள்.

"தள்ளுங்கோ தள்ளுங்கோ" என்ற எல்லோரையும் விலக்கி விட்டு வண்டில் இழுக்கப்பட்டது. அம்மாச்சி பயணம் போனாள் பரம்பரையை பராமரித்தவளை, கிராமத்து மருத்துவிச்சியை, கட்டிக்காத்த பழம் பண் பாட்டை, இரத்தத்தோடு ஊறிப்போன கலாச்சாரங்களை, விரிந்து பரந்த விருட்சம் ஒன்றை இழுத்துக் கொண்டிருந் தார்கள் எரியூட்டுவதற்கு. இன்றைய நம் சமூகமும் அப்படித்தான்.

"சொத்தெல்லாம் தொலைத்து சுகம் தேடி அலைவதைப் போல்"

நான் என் அக்காச்சியோடு பேசவில்லை. என்னையும் அவள் கண்டு கொள்ளவில்லை. அக்காச்சியின் முன் என்னைச் சில சமயம் காண்பித்தேன். அப்போதும் காணவில்லை. எங்கள் உறவில் விரிசல் எழுந்தது என உணர்ந்தேன்.

வாசல் படியில் உட்கார்ந்திருந்தேன். வாசலில் இருந்த அக்காச்சி என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"தம்பி வாடா" என்றாள் நான் அசையாமல் இருந்தேன்.

"டேய் கண்ணா இஞ்ச வா" என்று மறுபடி கூப்பிட்டாள் அப்போதும் நான் அசையவில்லை. "டேய் பண்டி வாடா இஞ்ச" என்று அதட்டினாள்.

எழுந்து ஓடினேன் அக்காச்சி என்னைக் கட்டி அணைத்தாள்.

"எங்கட செல்லக்குட்டி என்னடா அக்காவில கோபமோ" என்றாள் என் கன்னத்தில் முத்திட்டாள்

"இஞ்சருங்கோ இவர்தான் எங்கட தம்பி" என்றாள் நான் வெட்கத்தில் வீட்டுக்குள் ஓடினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமத்து நினைவுகள்

பங்குனி வெயில் கண்ணைப் பறித்தது காற்று புழுதியை முகத்தில் வாரி அடித்தபடி சுழன்று சுழன்று வீசியது. கிடுகு வேலியைத் தாண்டிச்சென்றால் கிழுவம் வேலி செழித்திருந்தது. சுற்றி வர கிழுவம் தடிகள் இரண்டு மூன்று முட்கம்பி வரிச்சுக்கள் நான் படலையை அடைந்து விட்டேன்.

"குஞ்சியப்பு குஞ்சியப்பு" என்ற கூப்பிட்டவாறே படலையை திறக்க முயன்றேன் பதில் எதுவுமில்லை. காத்தான் பாட்டு மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. என்னைக் கண்டதும் நாய் விர்ரென்று குரைத்துக்கொண்டு வந்தது.

"அடி அடி" என்ற நாயை விரட்டிய போதுதான்

"ஆரப்பு வா மோன" என்று கட்டிலில் இருந்த கொட்டனை ஊன்றியபடி எழுந்து வந்தார்.

அவருக்கு என்னை அடையாளம் தெரியவில்லை. கிட்டவாக வந்தார் காவி படிந்த வாயில் வெற்றிலைச் சிவப்பு குறையவில்லை, கடவாய்ப் பக்கத்தில் வெற்றிலை எச்சில் வடிந்தபடி, கையை நெற்றியில் குவித்து

"நீ ஆரப்பு என்ன வேணும்" என்றார்

நானும் வெகு சிரமப்பட்டு என்னை அறிமுகம் செய்ய முயன்று கொண்டிருந்தேன். காலச்சக்கரங்கள் வேகமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழன்று கொண்டிருக்கின்றன. மன வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் மனிதன் தடுமாறிக்கொண்டிரு க்கின்றான்.

அந்தக்காலத்தில் குஞ்சியப்பு நல்ல உடல் வாகு கொண்டவர். வசீகரிக்கும் தோற்றம் நிறைந்தவர். இப்போது உடல் தளர்ந்து சுருக்கங்கள் நிறைந்த உடலும் புருவங்கள் தளர்ந்து கண்ணை மறைக்கவும் நடுக்கம் நிறைந்த கைகளில் தடியை ஊன்றியபடி, தளர்ந்துபோன அந்த உடலுக்குள் புதுப்பொழிவுடன் வீற்றிருக்கும் கலைமகள், அவர் பாடிய அந்தப்பாட்டு எனக்குள் அந்தக் கலையை நேசிக்கும் கலைஞனைக் காட்டியது. படலையை நெருங்கும் போதே

"வென்று வந்தேன் அம்மா வென்ற வந்தேன் அந்த
வேசியர மகனார் வென்று வந்தேன்" என்ற பாட்டு என் காதில் கணீரென்று ஒலித்தது.

நான் வெகு சிரமப்பட்டு என்னை அறிமுகம் செய்ததும்

"அட எங்கட பார்வதியின்ர பெடியனோன" என்று வானத்தை நோக்கிக் கைகளைக் குவித்து.

"அப்பனே கல்லறையானே நீதானப்பா" என்று கடவுகளை வேண்டிக்கொண்டார்.

"எப்பிடியன சுகமா இருக்கிறியோ" தோளில் இருந்த சால்வையை எடுத்து தன் முகத்தை துடைத்தபடி கேட்டார். நான் "ஹ்ம்.." என்று தலையாட்டியதும் "வா அப்பு வா" என்ற கூட்டி வந்து கட்டிலில் இருத்தினார்.

இன்றெல்லாம் கூத்துக்கள், நாடகங்கள் அதிகம் யாரும் பார்ப்பதில்லை கூத்து பழந்தமிழரின் கலையாகும் முன்னைய நாட்களில் காத்தவராயன், மயானகாண்டம், சத்தியவான் சாவித்திரி என்ற அடிக்கடி பார்த்திருக்கிறேன். இப்போது இவை இல்லை. எங்கோ ஒரு மூலையில் இடையிடையே இவை மேடையேற்றப்பட்டாலும், அதனைக் கண்டு கொள்ள யாரும் விரும்புவதில்லை. தொலைக்காட்சி நாடகங்களிலேயே மூழ்கிப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறாரக்ள். உண்மையில் நாம் தமிழர்களின் கலைகளை மறந்துவிடவில்லை, எம் தமிழருக்கான அடையாளத்தையே தொலைத்துக்கொண்டிருக்கின்றோம். அப்போதெல்லாம் நான் சிறுவனாக இருந்த போது ஊரில் உள்ள அம்மன் கோவிலில் காத்தான் நடக்கும். இதில் குஞ்சியப்பு தான் காத்தானாக வருவார். அவரைப் பார்ப்பதற்காகவே ஒரு கூட்டம் வரும்.

"என்னடா மோன பிள்ளையள் இருக்கோ" என்று கேட்டபோது

"ஓமன ரெண்டு பேர் இருக்குதுகள்" என்று கூறியதும்,

"டேய் படிப்பியடா படிப்பி" என்று கூறினார்.

நான் அந்த மாமரத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன் அப்போது சிறுவயதாக இருக்கும் போது சிறுசுகள் சேர்ந்து விளையாடிய நினைவுகள் மனதில் துளிர்த்தது.

முகத்தில் மீசை அரும்பிய அந்த வயசில், பொத்தான் இல்லாத களிசானை இழுத்து முடித்து செருப்பணியாமல் புழுதி படிந்த கால்களுடன் அந்த நிலம் சுற்றித்திரிந்ததும், மாங்காய் பறிக்கப்போய் "மின்சார கம்பியில் தொங்கிய வௌவாலைப்போல்" முட்கம்பியில் காற்சட்டை கொழுவி தொங்கிய நண்பன் குழறியது இப்போதும் பசுமை நினைவாக மனதில் பதிந்து கிடந்தது. எனக்கு சிரிப்புத்தான் வந்தது நான் சிரித்தே விட்டேன்.

"ஏனப்பு சிரிக்கிறாய்" என்று மீண்டும் என்னை நினைவுக்குக்கொண்டு வந்தார் குஞ்சியப்பு.

"ஒண்டுமில்லையண" என்று உரக்கக்கூவினேன். அப்படி சொன்னால் தான் அவருக்குப் புரியும் என்பதால்.

அப்போது எனக்கு பதினேழு பதினெட்டு வயதிருக்கும் குஞ்சியப்புவின் வீடு களிமண்ணினால் சுவர் எழுப்பி பனையோலையால் வேயப்பட்டிருந்தது. கிடுகுச் செத்தை, அந்தச் செத்தைகளில் எம்.ஜி.ஆர் சிவாஜி படங்களும் எமது தேசத்திற்காக போராடியவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களும் தொங்கவிடப்பட்டிருக்கும். ராதேயன் என் உறவுக்காரன் குஞ்சியப்புவின் மகன். குஞ்சியப்பு என்றால் இன்றைய சிறுசுகளுக்கு யாரென்று தெரியாது. தாலாட்டில் சொல்லிப்பாட தாலாட்டும் இன்றில்லை. நான் சிறுவனாக இருந்த போது அம்மா தோளில் போட்டு நிலாக்காட்டித் தான் சோறூட்டுவா என்ற சொல்லக்கேட்டிருக்கின்றேன் இப்பொழுதெல்லாம்.

"டேய் உம்மாண்டி வருதடா சாப்பிடு" என்றால் குழந்தை பயத்திலேயே சாப்பிட்டு விடும் இதை சில சமயம் நான் நேரில் பார்த்தும் இருக்கின்றேன்.

நானும் ராதேயனும் நீண்ட நேரம் இந்த மாமரத்தின் கீழ் இருந்து கதைப்போம். இப்போது இந்த இடம் வெறிச்சோடிக்கிடந்தது. அவன் சிந்தனைகள் வேறு. நான் அவனிடம் சில சமயம் தர்க்கம் செய்ததும் உண்டு. அப்போதெல்லாம் அவன் கூறும் நியாயங்கள் சரியானதாக அமையும். அவன் நல்ல பேச்சாளன் சாதாரண தரம் மட்டும் படித்திருந்தான் பின் பாதியிலேயே விட்டுவிட்டான். அவன் பயணம் வேறு பாதையில் மாறியிருந்தது. சில சமயம் நான்கைந்து தோழர்களுடன் கனமான ஆயுதங்களை சுமந்தவாறு பயணிப்பதாகவும் அறிந்திருந்தேன். அன்று அவன் வீட்டில் சந்தித்தது. பிறகு அவனை நான் சந்திக்கவில்லை பல ஆண்டுகள் கடந்துவிட்டிருந்தது.

ஒரு நாள் மடத்து முருகன் கோவிலில் நான் குளித்துவிட்டு சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது.

"டேய் ராசன் மச்சான்" என்ற ஒரு குரல்.

சட்டென்று சைக்கிளில் இருந்து இறங்கினேன். மரத்தின் பின்னால் இருந்து ராதேயன் மடித்துக்கட்டிய சரத்துடன் கையில் ஒரு ஆயதத்துடன் வந்தான். என்னைக் கட்டி அணைத்தான் அவன் கரங்கள் மரத்துப்போய் இருந்தது. நீண்ட நாட்களின் பின் அவனுடனான சந்திப்பு மகிழ்ச்சியாயிருந்தது. அப்போதும் அவன் தன் கிராமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியே வினாவினான். தன் கிராமத்து நினைவுகளை நினைவுபடுத்தியவன் ஒவ்வொன்றாய் சொல் சந்தோசப்பட்டுக்கொண்டான்.

"டேய் இந்தக் காற்று சுதந்திரமானதல்ல நாம் சுவர்களுக்கிடையில் சிக்குண்டு நசுங்குவதாகவே உணர்கின்றேன்" நாம் தமிழர் நம் பண்பாடு தமிழ்ப்பண்பாடு நமக்கென்றொரு மொழி ஆனால் நம் சுதந்திரம் மட்டும் வேறு யாரோ ஒருவரால் தீர்மாணிக்கப்படுவதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை" என்று தன் ஆதங்கத்தை கூறினான். நான் புரட்சியாளர்களை பற்றியெல்லாம் படித்ததுண்டு அவனுள் ஊறிப்போன தேசியம் எனக்கு வியப்பாயிருந்தது.

"சரிடா ராசன் உன்னோட கதைக்க நிறைய இருக்கு இப்ப ஏலாது நாம் போயாக வேண்டும். எப்ப எம் தேசம் சுதந்திரத்தை. சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றதோ அப்ப நான் வருவன்ரா.." என்றான்.

அன்று தான் அவனை இறுதியாகப் பார்த்தேன் பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது அவனைக் காணவில்லை.

"டேய் அப்பு என்னடா" யோசிக்கிறாய் எண்டு மீண்டும் என்னை தட்டினார் குஞ்சியன்.

"இல்லயன ராதேயன்" என்று இழுத்தேன்.

"அத ஏனப்பு கேக்கிறாய் மகன்ர ஒரு முடிவும் இல்லை இருக்கிறானோ இல்லையோ ஒண்டும் தெரியாது. தாயின்ர சாவீட்டுக்கும் இல்லை. எனக்கும் அவன் கொள்ளி வைப்பனோ கடவுளே" என்ற கண்ணீர் வடித்தார்.

எனக்கு கண்கள் கலங்கி கன்னத்தின் வழி நீர் வழிந்தது. லேஞ்சியை எடுத்து துடைத்துக்கொண்டேன்.

"தம்பி எங்களோட எல்லாம் முடிஞ்சு போயிடும். இந்த ஆடின காலும் கையும் ஓஞ்சு போச்சு" என்ற ஆதங்கப் பட்டார்.

"காட்டுக்குப் போன என் கண்மணி எந்திராயோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று உரக்க மயான காண்டப் பாடலை ஒரு முறை பாடினார்.

"சரியப்புசரி நீ நேரம் போகுதே" என்றார்.

"ஓமன நான் போட்டு பிறகு வாறன்" என்ற சொல்லி விட்டு கையில் இருந்த பார்சலைக் கொடுத்து விட்டு நடந்தேன்.

நான் நடந்து கொண்டிருந்தேன் என் நினைவுகள் மட்டும் அந்தக் குடிசையில் சுழன்று கொண்டிருந்தது. ராதேயனைப் பற்றியும் எம்மில் இருந்து விடுபட்டுப்போன தமிழர் கலைகள் பற்றியும் என் நினைவுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

கொள்ளி வைக்க வருவானா? என்ற ஏக்கத்தோடு இருக்கும் ஒரு தந்தையின் குரல் என் காதில் கேட்டுக் கொண்டே இருந்தது.

வலம்புரி - சங்குநாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதை மாறிய பயணங்கள்

மாசி மாதத்தின் குளிர்பனி சில்லென்று இருந்தது. மேனியில் காற்றுப்படும் போது வெடவெடத்துப்போகும். கீதா போர்வையை இழுத்து தலைவரை மூடிக்கொண்டாள். அவளுக்கு தூக்கம் தொலைவில் போயிருந்தது. இடையிடையே நிசப்தத்தில் மணிக்கொரு தடவை அடித்து ஓய்ந்து கொண்டிருந்தது கடிகாரம். அதை எடுத்து நிறுத்தி வைத்துவிட்டு தூங்கினாள்.

"பிள்ளை மருமேன் எப்ப வருவார்" என்று அரைத்தூக்கத்தில் கேட்டார் சிவசம்பு.

"அவர் எப்பவெண்டாலும் வரட்டும் நீங்க பேசமா படுங்கோ" என்றாள். இந்த வெடுக்கென்ற பேச்சு சிவசம்புவின் மனதில் பக்கென்றிருந்தது. அவள் ஒரு நாளும் இப்படிக் கதைத்ததில்லையே பிறகு ஏன்? என்று அவர் மனதில் பல கேள்விகள் அந்த நேரத்தில் எழுந்து மறைந்தது.

"இஞ்சரப்பா நேற்று பெடியனும் பிள்ளையும் ஏதோ இரவிரவாக கதைச்சுக்கொண்டிருந்தவ ஏதோ பிரச்சினை போல" என்றாள் பார்வதி.

"சரி சரி நீ படப்பா விடிய மாடு கொண்டு போகோணும்" என்ற கூறிவிட்டு உறங்கினார் சிவசம்பு.

சில நேரங்களில் உண்மை கசப்பானதாக அமையும் மனங்கள் சில சமயங்களில் தீர்வுகள் எட்டாமல் அந்தரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிக்கும். சில சமயம் எதுவானாலும் பகிர்ந்து கொண்டால் பிரச்சினை இராது. அதுவே சில சமயம் பாரதூரமாகவும் அமைந்து விடுகிறது. வாழ்க்கை என்பது வசந்தம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடன் வாழ வேண்டும் என்று நினைப்பவன் ராம். ராமுக்கும் கீதாவுக்கும் திருமணமாகி பல மாதங்கள் தான் அன்று இரவு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். ஏதோ வேடிக்கையாக ஆரம்பித்த பேச்சு ஒவ்வொருவர் அந்தரங்கத்தையும் ஊடுருவிச் சென்றிருந்தது. அந்த நேரத்தில் அவன் மேலும் தொடர முடியாதபடி நிறுத்த நினைத்தான். ஆனாலும் பெண்மை சில சமயங்களில் ஆவல். அவசரம், சந்தேகம் என்ற வலைக்குள் அகப்பட்டுக்கொண்டு விடுகின்றது அப்போது தான்.

"அப்ப நீங்க யாரயாவது லவ் பண்ணிணீங்களா" என்று கீதா சட்டென்று கேட்டாள்.

அந்த நேரத்தில் அது அவனுக்கு ஒரு அபசகுனமாக அமைந்திருந்தது. இதை அவன் எதிர்ப்பார்க்கவில்லை. இந்தக்கேள்வி எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும் பிரச்சினைகள் என்னவாகும் என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

அந்த நேரத்தில் இல்லை என்று பொய் சொல்லவும் முடியாமல் வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டன. அவன் மௌனமாக இருந்தான். ஆனால் கீதாவின் முகத்தில் அமைதியைக் காணவில்லை கலவரப் பட்டுக் கொண்டிருந்தாள். "மாதவி வீடு சென்ற கோவலனுக் காய் மதுரையை எரித்தது கண்ணகியால் மட்டும் இயலக் கூடியதே" நிஜ வாழ்வில் இது எவ்வளவு விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ராமு அறிந்தும் இருந்தான். ஆனாலும் மேலும் அவள் வற்புறுத்தத் தொடங்கினாள்.

"ம் நானும் லவ் பண்ணினான்" என்று தொண் டைக்குள் சிக்கியிருந்த வார்த்தை வெளியில் வந்து வீழ்ந்தது. அந்தக் கணத்தில் அவள் வெண்மை படிந்த வதனங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பேறி தழலாய் வெப்பத்தை உமிழ்ந்தது. அதற்கு மேல் அவன் தொடர விரும்பவில்லை.

"இஞ்ச பார் கீதா நானும் விரும்பினான் அந்தப் பிள்ளையும் விரும்பியது ஆனால் அது கனியாத காதல்" என்று கூறிவிட்டு சட்டென்று எழுந்து போய்விட்டான்.

அவள் அதை விரும்பவில்லை என்பதை அவள் சாயல் அப்பட்டமாக வெளிக்காட்டியது. ராமுவுக்கு மறுநாள் கொழும்பில் ஒரு பரீட்சை எழுதவேண்டி இருந்ததால் அன்று மாலையே புறப்பட்டு போயிருந்தான் ஆனாலும் அவளில் மாற்றத்தைக் காணவில்லை. முன்னைய இரவுகளில் அவள் பதித்த முத்தத்தின் சுவை களவு போயிருந்தது. புறப்படும் போது கூட பற்றியிருந்த கைகளை வெடுக்கென்று பறித்துக்கொண்டு உதட்டளவில் ஒரு பொய்ப்புன்னகையை உதிர்த்து விட்டிருந்தாள்.

அந்த நேரத்தில் ராம் அதைத் தவிர்க்க யோசித்தான் ஆனாலும் அவள் கேட்ட போது ஒரு பொய் சொல்லிட அவன் விரும்பவில்லை. தனக்குரியவளிடம் உண்மையை மட்டும் பேச வேண்டும் என்று நினைத்திருந்தான்.

***

காலை நேரத்துப் பனித்துளி புற்களின் மீது முத்துக்களைப் பிரசவித்திருந்தது. அவை பளீர் பளீர் என்று மின்னிக்கொண்டிருந்தன. பகலவன் மெதுவாகத் தன் கரங் களை உயர்த்தி வானவீதியில் ஊர்வலம் வரத் தொடங்கி யிருந்தான். மூடியிருந்த பனிப்புகை அச்சத்தில் கலைந்து கொண்டிருந்தது. இராத்திரி அவள் வெகுநேரம் தூக்கமின்றி இருந்தவள் மனதிற்குள் புறுபுறுத்தபடியே இருந்தாள்.

"என்னடியம்மா என்ன ஏதோ பிரச்சினையோ" என்ற தாய் கேட்ட போது.

"ஒண்டுமில்ல நீங்கள் உங்கட வேலையைப் பாருங்கோ" என்று எரிந்து விழுந்தாள். உண்மையில் அவள் இப்படி பேசியதும் இல்லை நடந்து கொண்டதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வேலையை முடித்துக்கொண்டு முற்றத்து மாமரத்தின் கீழ் இருந்த படியே தலைவாரிக் கொண்டிருந்தாள்.

"கீதா கீதா" என்று தெருக் கதவருகில் இருந்து ஒரு குரல். அப்படியே தலையை முடிந்து கட்டிக்கொண்டு கையை அலம்பிக்கொண்டு

"ஓம் வாறன்" என்று சொல்லியபடி கதவருகே வந்தாள். கதவைத் திறந்தாள்.

"வணக்கம் எப்படியம்மா இருக்கிறாய்" என்று வாய் அகலத்துக்கு சிரித்தபடியே நின்றாள் மாலதி.

"அடி மாலதி எப்படி வந்தா உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு" என்ற அவளைக் கட்டி அணைத்துக் கொண்டாள் கீதா.

"வா வா உள்ளவா" என்ற கையைப் பிடித்தபடியே அழைத்துக்கொண்டு வந்தாள்.

"சரி இதுல இரடி வாறன்" என்று கூறிவிட்டு போனவள் கையில் கோப்பியுடன் வந்தாள். "இப்ப எங்கடி இருக்கிறாய்" என்று கேட்டுக்கொண்டே கோப்பியை நீட்டினாள்.

"இஞ்சரடி நான் கனடாவில் தான் ஒரு கிழமைக்கு முன்னம் தான் வந்தன் உன்னைப் பார்த்துப்போட்டுத்தான் போகவேணும் எண்டு இருந்தன் ஒரு வழியா உன்னைப் பாத்தாச்சு" என்ற பெருமூச்செறிந்தாள்.

"அப்ப கண்ணன் என்ன மாதிரி" என்று சட்டென்று கேட்டாள் கீதா. மாலதி கீதாவை நிமிர்ந்து பார்த்தாள் எதுவும் பேசாமலே.

"ஏன்ரி ஏதும் பிரச்சினையா" என்றாள் கீதா.

"அது ஒரு காலமடி இப்படியெல்லாம் நடக்குமெண்டு நினைக்கேல்ல கம்பஸ்ல படிக்கேக்க. கண்ணனைத் தான் கட்ட வேணும் எண்டு நினைச்சன்" என்று நிறுத்திக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறகு என்னடி" என்று தன் ஆவலை அடக்க முடியாமல் கேட்டாள்.

கம்பஸ் முடிச்சு அடுத்த வருஷம் வீட்ட சொன்ன போது பெரிய பிரச்சினையாப் போச்சுடி. அப்பா சம்மதிக்கல அவர் தான் சூசைட் பண்ணுவன் எண்டு வீட்ட வராம போயிட்டார் தங்கச்சியாக்களும் நான் என்ன செய்ய" என்று கண்களில் வழிந்த நீரைத் துடைத்தபடியே கூறினாள் மாலதி.

"கண்ணன் வேற கலியாணம் செய்திட்டதா கேள்விப்பட்டன். இனி, என்னடி ஏதோ வாழத்தானே வேணும். என்னதான் மறந்திட்டன் என்டு நினைச்சாலும் சில நேரங்களில் எங்கோ ஒரு மூலையில் தட்டிக்கொண்டே இருக்கிறது" என்று மறுபடியும் கண் கலங்கினாள்.

அதற்கு மேல் கீதா அந்தப் பேச்சை தொடர விரும்பவில்லை.

"சரிடி நீ இப்ப ஹப்பியா இருக்கிறா தானே" என்று ஆறுதல் கூறினாள்.

"இஞ்ச பாருடி உனக்கு வெடிங் எல்லாம் நடந்து ட்டுது என்று அறிஞ்சன் அவர் இல்லையோ" என்ற மாலதி கேட்டதும்.

"அவர் கொழும்பு போயிற்றார்" இது தான் அவரோட போட்டோ என்று எடுத்துக்காட்டினாள் கீதா.

மாலதி கீதாவிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்படும்போது "இஞ்ச பாருடி எனக்கு கிடைத்தது சிறப்பு" என்ற வாழ்கிறேன். நான் மட்டுமல்ல இன்னும் எத்தனையோ பேர் என்றது மட்டும் கீதாவின் இதயத்தில் அடிக்கடி புதுப்பிக்கப்பட்டுக்கொண்டிருந்தது.

***

சோபாவில் இருந்தபடியே ஏதோ சிந்தனையில் இருந்தாள் கீதா. அவள் எண்ணமெல்லாம் மாலதியையே சுற்றிக்கொண்டிருந்தது. கண்ணனும் மாலதியும் படிக்கும் போதே காதலித்து வந்தவர்கள். திருமணம் செய்வது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயித்திருந்தனர். இப்படி நடந்தது கீதாவுக்கு பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

கீதா எழுந்து கிணற்றடிக்குப் போனாள் அவள் சிந்தனையில் தெளிவு இருந்தது "ச்சே எவ்வளவு பிடிவாதமாக நடந்திட்டன் அவர் உண்மையைத் தானே சொன்னவர் நான் இப்படிக் கோபித்திருக்கக்கூடாது" என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டே ஒரு வாளி தண்ணீரை எடுத்து வார்த்துக்கொண்டாள். நீரோடு சேர்ந்து அவளைப் பீடித்திருந்த பீடையும் விட்டு விலகியிருந்தது. அவள் ஒரு புதியவளாக தெரிந்தாள். களங்கமற்ற வானத்தில் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாய் பிரகாசம் செய்வதைப்போல் அவள் இருந்தாள். அவள் மனம் விசாலமானதாக இருந்தது. பிரகாசம் ஒன்று அவள் உள்ளத்தில் சுடர் விட்டெரிந்தது.

அன்று மாலை நேரம் அப்போது தான் ராம் கொழும்பில் இருந்து வந்திருந்தான். குளித்துமுடித்துவிட்டு தலையைத் துடைத்தபடி சோபாவில் உட்கார்ந்திருந்தான். கீதா சுடச்சுட ஒரு தேத்தண்ணி போட்டுக்கொடுத்தாள். குடித்து முடித்தவன் எழுந்து பின் வாசல் பக்கமாகச் சென்றான்.

வேப்ப மரத்தின் கீழ் இருந்த கல் இருக்கையில் அமர்ந்தபடியே வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். வெள்ளி நிலவு சில சமயம் கருமேகங்களால் மூடியும். சில சமயம் தன்னை விடுவித்துக்கொண்டு தெள்ளத் தெளிவா கவும் இருந்தது.

சற்று நேரத்தில் கீதா அந்த மரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அன்று ஏனோ அவள் அழகாகத் தெரிந்தாள். அவள் கூந்தல் இப்படி அழகாக இருந்ததில்லை. ஒரு சில கூந்தல் அவள் கன்னத்தின் வழியே தவழ்ந்து அவளை ஸ்பரிசித்துக்கொண்டிருந்தது. அவள் ராமை நெருங்கினாள். அவன் சற்றும் எதிர்ப்பார்க்காத வகையில் தன் கைகளை அவள் தோள்களில் மாலையாக கோர்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Sorry sorry" என்று கெஞ்சினாள்.

அவள் ஸ்பரிசம் அவனுக்கு ஏதோ ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. சட்டென்று அவளைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

"உங்களுக்கு நான் இருக்கிறன்" என்ற அவன் கன்னத்தில் இதழ்கள் பதித்தாள்.

வானத்தில் மூடியிருந்த கருமேகங்கள் கலைந்திருந்தது. நிலவு வானத்தில் மோகனப் புன்னகை கலந்து வலம் செய்து கொண்டிருந்தது. அது அழகாக இருந்தது.

"மீண்டும் ஒரு புது உறவில் இருவரும் திளைத்திருந்தனர்"

- மித்திரன் வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகை

வேப்பங்காற்று மேனியில் படும் போது இதமாக இருந்தது. வெண்ணிலா கிளைகளில் பரவி நிழற்கோலங்கள் வரைகின்றது. மணலில் ஒரு துண்டைப்போட்டுக்கொண்டு கையைத்தலைக்கு வைத்து தூங்கிக்கொண்டிருந்தாள் கண்ணகை. கண்களில் தூக்கம் இல்லை கணீரென்று ஒலித்துக்கொண்டிருந்த பாடல்கள் அவளுக்கு அலுப்பை ஏற்படுத்தியது.

"சீ இதென்னப்பா இவங்கள் படுக்க விடமாட்டங் களாம்,

டேய் எல்லாம் நிப்பாட்டுங்கோடா" என்று ஒரு அதட்டு அதட்டினாள் கண்ணகை.

"இதுகள் ஆற்ற சொல்லத்தான் கேக்குதுகள். எல்லாம் ஒரு எடுப்பில் திரியுதுகள்" என்று மனதிற்கள் பொரிந்தாள்.

கண்ணகைக்கு எழுபது வயதாகின்றது. இந்த வயதிலும் எல்லா வேலைகளையும் இழுத்துப்போட்டுச் செய்வாள். நல்லது கெட்டது நடந்தா கண்ணகையின் பிரசன்னம் அங்கும் இருக்கும். சொந்த பந்தங்கள் என்று எல்லோருடனும் சேர்ந்து பழகியவள். நாலு சாதி சனத்தை நாடி நடப்பவள். சில நாட்களாக கண்ணகைக்கு மனம் நன்றாக இல்லை. இன்றும் அப்படித்தான் ஏதேதோ புறுபுறுத்துக்கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா நீங்கள் படுங்கோவன் காலையில வெள்ளன வெளிக்கிட்டால் தான் மண்டபத்துக்கு போகலாம்" என்றான் மகன் கனகு.

"ம் கண்டறியாத மண்டபம் மாளிகை மாதிரி இவ்வளவு பெரிய வீடு கிடக்க மண்டபம், மங்கலம் தெருவுல முழங்கட்டும் அமங்கலம் வீட்டில் அழட்டும்" என்ற முணு முணுத்தாள்.

"ஏனம்மா ஐயா படுத்திட்டாரோ" என்றான் கனகு.

"ஓம் ஓம் நீ போய்ப்படு, இல்லாட்டி உன்ர வேலையைப் பார்" என்று கூறினாள் கண்ணகை, கனகு அதற்கு மேல் அங்க நிற்காமல் வீட்டிற்குள் சென்றான்.

கண்ணகையின் ஒரே மகன் கனகு நல்ல உத்தியோகத்தில் இருப்பவர், கனகுவின் மூத்த மகளின் திருமணம் நாளைக்கு அதுவும் மண்டபத்தில் என்ற பேச்சு தொடங்கியதுமே கண்ணகையின் முகத்தில் சலனம் ஏற்பட்டுவிட்டது. அவளுக்கு தன் சாதிசனம் எல்லாத்துக்கும் சொல்லி வீட்டில் ஒரு பெரிய சபை நடத்தி கலகலப்பாக இருக்க வேணும் என்ற ஆசை.

"அம்மா என்னோட வேலை செய்யிறவ, பிள்ளையோட வேலை செய்யிறவ எண்டு நிறையப்பேர் வருவினம், சரியான கஷ்டமாயிருக்கும், சமாளிக்கேலாது" என்று கூடியிருந்த போது சொன்னான் கனகு.

"டேய் தம்பி நீ என்ன சொல்லுற இவ்வளவு பெரிய வீட்டில் சமாளிக்கேலாது என்டுறாய்" என்று கடுப்புடன் கூறினாள் கண்ணகை.

"இல்லயம்மா இப்ப வீட்டில செய்யிறது குறைவு எல்லாச் சனமும் மண்டபத்தில் தான் செய்யினம், பிறகு சனம் என்ன நினைக்கும்" என்றான் கனகு.

"டேய் வீட்டில் நல்லதுகளைச் செய்ய வேணும் அப்பத்தான் லட்சுமி கடாட்சம் வரும்" என்றாள் கண்ணகை அதில் ஒரு அதட்டலும் இருக்கத்தான் செய்தது அதற்குமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைகுவும் மனைவியும். அதில் நிற்காமல் முகத்தைத் உம்மென்று வைத்துக்கொண்டு போனார்கள்.

"என்ன நீ பேசாம இரு அதுகள் என்னன்டாலும் செய்யட்டும்" என்று மனைவியை அடக்கினார் சுந்தரம்.

"சரியடா நீங்கள் என்னன்டாலும் செய்யுங்கோ" என்ற கூறிவிட்டு அடுக்களைக்குள் நுழைந்தாள் கண்ணகை.

கண்ணகைக்கு மனம் புழுங்கிக் கொண்டிருந்தது. "மகன் கலியாணம் கட்டிய போது இந்த முத்தத்தில தான் நூறடிப்பந்தல் இருக்கும். சாதி சனம் ஒரு வாரத்துக்கு முன்பே வந்து தங்கிருச்சு, கலியாணம் முடிந்து நாலாம் சடங்கு மட்டும் எவ்வளவு கலகலப்பு ஒரு கிழமைக்கு முன்னமே பலகாரத்துக்குரிய ஒழுங்குகள் செய்து, நாள்பார்த்து சட்டி வைத்து, சொந்த பந்தங்கள் எல்லாத் துக்கும் ஆக்கிப்போட்டகை, இப்ப என்னடா வெண்டால் எங்கேயோ யாரோ கட்டிய மண்டபத்தில் கலியாணம்" என்று மனதிற்குள் புறுபுறுத்துக் கொண்டே இருந்தாள்.

"என்னப்பா என்ன ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருக்கிறாய்" என்றார் சுந்தரம்.

"ஒண்டுமில்லையப்பா இதுகளும், இதுகள்ற்ற எடுப்பையும் நினைக்க கவலையா கிடக்கு" என்று புழுங்கினாள்.

அன்றைக்குத் தொடங்கியது. நாளை கலியாணம் எல்லா ஒழுங்கும் சரி, கண்ணகைக்கு மனத்தில் சங்கடம் நெளிந்தது. ஆனாலும் எதுவும் பேசாமல் ஒத்து ஊதினாள்.

மறுநாள் அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் வெளிக்கிடத்தொடங்கியாச்சு, மணப்பெண் அலங்காரம் முடிந்து மண்டபத்துக்கு புறப்படத் தயாரானாள். கண்ணகை சட்டென்று ஞாபகம் வந்தவளாக அறைக்குள் சென்றாள் சற்று நேரத்தில் வெளியே வந்தவள்.

"இந்தா மருமோள் இதைப்பிள்ளையின்ர கழுத்தில போடு" என்று நீட்டினாள். பத்துப்பவுண் தேறும் அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதக்கம். மருமகள் வாங்கி மகளுக்குப் போட்டுவிட்டாள். அலங்காரம் செய்ய வந்தவள்.

"இல்லா அம்மா இது வேண்டாம் இது பெரிசா இருக்கு இது அவ்வளவு சூட்டவுள் ஆகாது" என்று தடுத்துவிட்டாள். கண்ணகைக்கு முகம் சிவந்து சட்டென்று வாங்கிக்கொண்டு போனாள். எல்லோரும் புறப்படத் தயாரானர்கள். அப்போது தான் வீடியோக்காரன் தன் பரிவாரங்களோடு வந்து இறங்கினான்.

"நில்லுங்கோ நில்லுங்கோ" என்று வாசலில் கால் வைக்கும் போது தடுத்தான் ஒருவன்.

"என்னப்பு நீ நல்ல காரியத்துக்கு பேகேக்க நில் எண்டு தடுக்கிறாய்" என்று சீறினாள் கண்ணகை.

"அம்மா நீங்கள் பேசாம இருங்கோ அவக்கு எல்லாம் தெரியும்" என்றான் கனகு.

ஒரு வழியாக மண்டபத்துக்கு வந்து சேர்ந்தாகி விட்டது. கண்ணகையும் கட்டாயமாக ஒரு சிரிப்பை வரவழைத்துக்கொண்டு மண்டபத்தினுள் நுழைந்தாள்.

"என்னப்பா நீ இதில் இரு நீ ஏதும் சொல்லப்போய் பிறகு பிரச்சினை" என்று சுந்தரம் தன் மனைவியை ஓரிடத்தில் அமர்த்திவிட்டார். நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தது. கண்ணகைக்கு எல்லாம் புதுசாக இருந்தது. சுபநேரம் தொடங்கியதும் தாலி கட்டுவதற்காக ஐயர் தாலியை எடுத்துக்கொடுத்தார். மணமகள் தாலியைக் கட்டும் போது.

"கொஞ்சம் பொறுங்கோ" என்று ஒரு கமராக்காரன் சொன்னான்.

"டேய் குறுக்கால போனவா எந்த நேரத்தில் என்ன சொல்லுற" என்று சீறி விழுந்தாள் கண்ணகை. அதற்குள் அருகில் நின்ற கனகு.

"அம்மா நீங்கள் கொஞ்சம் பேசாமல் இருங்கோ" ஒரு கடுப்புடன் கூறினான். அதற்குள் சுந்தரம்.

"இஞ்சை வா கண்ணகை பேசாம இரு" அதட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரத்தில் தாலி கட்டி முடிந்தது. ஒரு மாதிரியாக ஒப்பேறிவிட்டது என்று கண்ணகை நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

பேத்தியின் திருமணம் முடித்து வைத்துவிட்ட சந்தோசம் கண்ணகைக்கும், சுந்தரத்துக்கும்.

"இந்தக் காலத்துப்பிள்ளையளோட சமாளிக்கேலாது எங்களோட எங்கட சாதிசனம், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் எல்லாமே போயிடும் சரி என்னன்டாலும் நடக்கட்டும்" என்று மனைவி கண்ணகைக்கு சொல்லிக் கவலைப்பட்டார் சுந்தரம்.

பல ஆண்டுகள் விரைந்து ஓடியது. சுந்தரத்துக்கும் ஏலாமல் போய்விட்டது. கண்ணகையும் முன்பு போல் இல்லை படுத்தால் எழும்ப முடியாதபடி சில காலம் உடம்பு வலி, சில காலம் முட்டு என்று அடிக்கடி வருத்தம். கனகு இருவரையும் கவனிப்பதற்கு ஒரு பெண்ணை சம்பளத்திற்கு அமர்த்தியிருந்தார். அதுவும் ஏனோ தானோ என்று தான். ஒரு நாள் கண்ணகை மகனிடம் சொல்லிவிட்டாள்.

அன்று கனகுவும், மனைவியும் வீட்டில் இருந்தனர்.

அம்மா எங்களுக்கும் வேலை, எங்களாலை உங்களை பார்க்கிறதெண்டால் கஷ்டமா இருக்கு. உங்கள ஹோம்ல கொண்டு போய் விடட்டே. மாதம் ஐம்பதாயிரம் கேட்டவ" என்று ஒரு மாதிரியாக கதையை தொடக்கினான்.

கண்ணகையின் முகம் சிவந்தது. ஆத்திரத்தை அடக்க முடியாமல் "ஏன்ரா மனே உன்ன உதுக்கே பெத்தனான்" என்று முகத்தில் அடித்தாற் போல் கேட்டாள்.

"எங்களால என்ன செய்ய வேலைக்குப் போனா திரும்பி வரும் வரைக்கும் உங்கள ஆர் பார்க்கிறது" வாற கிழமை பிள்ளையும் வாறா பிறகு உங்களோட சமாளிக் கேலாது உங்கட அடுக்குப் பண்றதில் எங்கட நேரம் போகுது" என்றான் கனகு. கண்ணகை எதுவும் பேசவில்லை சுந்தரம் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தார். அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் கனகு அங்கு நிற்கவில்லை.

மறுநாள் மதியம் 3 மணியிருக்கும் கனகு சாப்பாடு எடுத்துக்கொண்டு வந்தான்.

"அம்மா அம்மா இந்தாங்கோ" சாப்பாடு என்று கண்ணகையை அழைத்தான். கண்ணகை சாய்மனைக் கட்டிலில் அமர்ந்தபடி தன் வீட்டை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள். கனகுவின் குரல் கேட்கவில்லை எந்த சலனமுமின்றி இருந்தாள் கனகு அருகில் போய் கண்ண கையை மெதுவாகத் தொட்டு "அம்மா அம்மா" என்று பலமுறை அழைத்தான். மெதுவாகத் தோளில் கைவைத்து.

"அம்மா என்னம்மா செய்யுது" என்றான் கண்ணகை யின் தலை தொப்பென்று விழுந்தது. கையைப் பிடித்துப் பார்த்தான் விறைத்துப்போய் இருந்தது. அதற்குள் கண்ண கையின் அயலார் சத்தம் போட்டு ஓடி வந்து விட்டனர்.

"தம்பி அக்காத்தைக்கு என்ன நடந்தது" என்றார் பார்வதி. சட்டென்று கண்ணகையின் கையைப் பிடித்து பார்த்த பார்வதி சொன்னாள்.

"தம்பி கண்ணகை அக்கை தவறிட்டா" என்று கனகு தான் நேற்றுக் கூறியதை நினைத்துக் கத்திக் கத்தி அழுதான். அழுவதால் என்ன வந்துவிடப்போகிறது.

கீழ்வானம் இருள் சூழ்ந்தது. கரு மேகங்கள் வானம் முழுவதும் பரவியது. மழை கொட்டிக்கொண்டிருந்தது. வஸ்துக்கள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுக் கொண்டிருந்தது. கால வெள்ளத்தில் அழிந்து செல்லும் நம் பாரம்பரியங்களுமாய்.

"ஒரு பழமையின் தேடல், உறவுகளின் சங்கமம், ஒற்றுமையின் சின்னம், உறவுகளை தேடிய உறவு, சம்பிரயதாயங்களின் சாட்சி ஒன்று ஓய்ந்து போனது.

– வலம்புரி சங்குநாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருப்பு

தூரத்தில் தெரியும் ஒற்றைப்பனை மரத்தை வெறித்துப்பார்த்தபடி வாசலில் உட்கார்ந்திருந்தாள் சாந்தி. அடிக்கடி வீட்டுக்கூரையின் மீது அமர்ந்து கத்திக் கொண்டிருந்த காகத்தைத் துரத்துவதும் உட்காருவதுமாக இருந்தாள்.

"என்ன பிள்ளை இந்தக் காகம் இண்டைக்கு இப்படிக் கரையுது ஒருக்காத் துரத்தம்மா" என்றாள் பார்வதி.

"இஞ்சரப்பா நீங்கள் அந்தப் பெடியனைப் பற்றி விசாரிச்சனீங்களோ" என்று தன்னுடைய புருஷனை கேட்டாள்.

"இல்லையப்பா ரெண்டொரு நாள் பொறு நாங்களும் அவசரப்படக்கூடாது" என்றார் சோமு. தோளில் கிடந்த துண்டை எடுத்துக் கதிரையில் போட்டுவிட்டு உட்கார்ந்தார்.

"என்னப்பா என்னவோ கடுமையா யோசிக்கிறியள் போல" என்று அவரை நிஜவுலகத்திற்கு கொண்டு வந்தாள் சாந்தி.

முற்றத்துச் செவ்வரத்தையின் மீதமரும் வண்டின் ரீங்காரம் காதில் தேன் வார்த்தது. குயிலின் ஓசை மெல்லக் காற்றில் மிதந்து வந்தது. இதழ் விரியும் மல்லிகை வாசம் வெடித்துப் பரவும் அந்திமாலை சாந்தி வாசலில் இருந்து எழுந்து உள்ளே வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னப்பா ஏதொ செய்யுதோ" என்றாள்.

"இல்லைப் பிள்ளை நாளைக்கு பெடியன்ர வீட்டார் வாறம் என்று சொன்னவ" அதுதான் என்று இழுத்தார்.

"அப்பா என்னைப் பற்றி யோசிக்காதேங்கோ கடவுள் இருக்கிறார் I am very happy" என்று ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு உள்ளே போய்விட்டாள்.

சாந்தி. பெயருகேற்ற சாந்தமும், அமைதியும் உடையவள் இரவு நேரத்தில் வானில் தோன்றும் நிலவு அவள். கதிரவன் ஒளி வதனத்தில் பிரகாசிக்கும். பருவத்தின் அழகையெல்லாம் ஒரு சேரத்திரட்டி பிரமன் செய்துவிட்ட சிற்பமாய் அவள். அப்போது அவளுக்கு பதினெட்டு வயது தானிருக்கும் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் உயர்தரம் படித்து முடித்துவிட்டாள். பெறுபேற்றுக்காக காத்திருந்தாள். நாட்டின் அசாதாரண சூழல் தலைவிரித்தாடியது. இடப்பெயர்வுகள் அரங்கேறிக்கொண்டிருந்தது. சாந்தியின் தகப்பன் சோமு ஒற்றைக்காலில் நின்றார். போகத்தான் வேண்டுமென்று கொஞ்ச நாளைக்கு பார்த்துப் போட்டு திரும்பி வருவதாக போனார்கள். நாட்கள் நகர்ந்தது. வான் அரக்கர்களின் தாக்குதல் எல்லை மீறிப்போனது. ஒரு நாள் வீட்டில் இருந்த வேளை அருகில் வெடித்துச் சிதறிய குண்டு சாந்தியின் காலைப் பறித்துக்கொண்டது. பாதத்திற்கு மேல் சிறிய தூரம் வரை கால் இல்லாமல் போனது. பட்டது போதும் என்று ஊருக்கே திரும்பினர். ஊனம் அதை ஒரு பொருட்டாக அவள் கருதியதில்லை. ஆனாலும் சோமுவுக்கு தன்னால்தான் நடந்ததென்று வருத்தம்.

"எவ்வளவு காலம் தான் பொம்பிளைப் பிள்ளைய வீட்டில வச்சிருக்க முடியும்" என்று அடிக்கடி புலம்பும் பார்வதியின் நிலை எப்பிடியாவது ஒரு வரன் பார்த்து செய்து வைச்சிட்டா பிறகு கவலையில்லை சந்தோசமாகக் கண்மூடிடலாம் என்று எண்ணாத நாளில்லை. ஆனாலும் தூண்டிலில் சிக்காத மீனாக சாந்தி, பேச்சை எடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம் ஏதோ ஒரு தடங்கல், சில சமயம் பெண் பார்ப்பு. சம்பந்தக் கலப்பு என்று நிறைவேறினாலும் பிறகு தடைப்பட்டு அப்படியே நின்று விடும்.

"சீதையை சிறை மீட்க ராமன் வருவதெல்லாம் இதிகாசங்களில் தான்" என கூறுவாள் சாந்தி.

"இஞ்சரப்பா ஒருக்கா பெரியண்ணைக்குச் சொல்லுங்கோ அவரெண்டா நல்லாக் கதைப்பார்" என்றாள் பார்வதி.

இந்தச் சம்பந்தமாவது நடக்க வேணும் என்று புளியடிக் காளிக்கு நேர்த்தி வைத்தாள்.

"இந்தக் காரியம் நடந்தா தான் மடிப்பிச்சை அம்மனுக்கு எடுத்துக்கொடுக்கிறது தான்" என்றாள் பார்வதி.

"என்னவோ நேர்த்திய வை இதாவது நடக்கட்டும்" என்றார் சோமு. கூரையின் மீதிருந்த பல்லி சொல்லியது. கூரையை நிமிர்ந்து பார்த்துவிட்டு "அப்பனே நீதாய்யா துணை" என்று வேண்டிக்கொண்டார்.

அன்று நாலுமணிக்கெல்லாம் மாப்பிள்ளை வீட்டுக்காரரர் வந்துவிட்டனர். சோமு, பார்வதியின் தமையனார். எல்லோருமாக வரவேற்றார்கள். பார்வதிக்கு இது பதற்றம் நிறைந்ததாகவே இருந்தது. இந்தச் சம்பந்தம் நடந்திட வேணும் என்று வேண்டினாள். மாப்பிள்ளை வீட்டார் பேச்சை தொடங்கும் போது சோமு சொன்னார்.

"இஞ்ச பாருங்கோ எங்களுக்கு ஒரே பிள்ளை நீங்கள் கவலைப்பட வேண்டாம். எங்கட சொத்துப்பத்தெல்லாம் அவளுக்குத்தான்" என்றார்.

"என்னண்டாலும் அறப்பேசி உறக்கொள்ள வேணும் தானே" என்று பெரியண்ணை சொன்னதும் மாப்பிள்ளையின் தகப்பனார் தன் தலையை ஆட்டி ஆமோதித்தார்.

"சரி, வேற என்ன நல்ல நாளாய் பார்த்து சம்பந்தக் கலப்பு வைக்கலாம் தானே" என்ற மாப்பிள்ளையின் தாய் சொன்னாள். இவ்வாறு சொன்னதும் பார்வதியின் முகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசம் கரைபுரண்டோடியது. அன்று நாள் பார்த்து சொல்லி அனுப்புவதாக கூறிப் புறப்பட்டுப் போனார்கள். நாட்கள் நகர்ந்ததே தவிர எந்தச் செய்தியும் வரவில்லை. சோமுவும் தரகரிடம் பல தடவை நடந்து களைத்துப் போனார்.

"அப்பா நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். நான் கடைசிவரைக்கும் உங்களோடயே இருந்திடுறன்" என்று சொல்லி நழுவிக்கொள்வாள் சாந்தி. ஆனாலும் அவள் மனத்தில் ஒரு சோகம் இருக்கத்தான் செய்தது.

அன்று வெள்ளிக்கிழமை எப்படியாவது பிள்ளை யாரை கும்பிட்டாகனும் என்ற வேண்டுதல். சோமு காலையில் புறப்பட்டுவிட்டார் கோயிலுக்குச் சென்று கொண்டிருக்கும் போது எங்கோ பார்த்த முகம் கிட்ட நெருங்கும் போதுதான் "அட நம்ம தரகர்" என்று ஒரு பெருமூச்சு விட்டார்.

"அண்ண என்ன பிறகு அவ ஒண்டும் சொல்ல வில்லையோ" என்றார் சோமு.

"இல்ல அண்ண அவ பிள்ளையின்ர பிரச்சினையை விரும்பல்ல" என்று நாணிக்கோணி நின்றார் தரகர்.

"அண்ண இஞ்ச பாரும் பிள்ளைக்கு கால் ஏலாது எண்டு நீங்கள் முன்னமே சொன்னீங்கள் தானே" என்றார் சோமு.

"ஓம் ஓம் என்னவோ உங்களுக்காக நான் பல தடவை பேசிப்பார்த்திட்டன் அவ எந்தப்பதிலும் இல்லை என்னைக் குறைநினைக்காதேங்கோ" என்ற தரகர் கூறிவிட்டு நடந்தார்.

வாசற்படியில் இருந்த படி முற்றத்து செவ்வரத்தைய சுற்றி விளையாடும் அணிலைப் பார்த்துக்கொண்டிருந்தாள் சாந்தி சில சமயம் அது மரமேறிக் தாவுவதும், சில சமயம் நிலத்தின் மீது வீழ்ந்து தானியங்களை கொறிப்பதுமாய் இருந்தது. சுதந்திரக்காற்றை சுவாசித்தபடி தடையின்றி படர்ந்து எங்கும் சிறகுகள் விரித்து பறக்க நினைக்கும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சின் எண்ணங்களை வார்த்தைகளால் கூற முடியாது. தன் காலுக்கு ஒரு சக்கரம் பூட்டி வீதியெல்லாம் ஓடி விளையாட வேண்டும். துள்ளித்திரிந்த பள்ளிப் பருவ நினைவுகளை எண்ணி கனவுலகில் லயித்து போயிருந்தாள் சாந்தி.

வாசலில் கேட்ட மணிச்சத்தம் அவள் கனவுகளை கலைத்துவிட்டது. எழுந்து மெதுவாக வாசல் வரை வந்தாள்.

"சோ.சாந்தி நீங்களா?" என்றான் தபால்காரன்.

"ஓம் நான் தான்" என்றாள் சாந்தி.

சைன் வைத்து கடிதத்தை வாங்கிப்பிரித்தாள். அதில் கண்டிருந்த செய்தியைத் திரும்பத் திரும்ப படித்தாள். மனதில் ஒரு சந்தோசம் ஆனந்தத்தில் அலைபுரண்டெழும் உள்ளம். சில சமயங்களில் என்னவென்று சொல்வது. இன்றும் சாந்தி அதே மன நிலையில் "காலையில் கதிரவன் வரவு கண்டு களித்து மலரும் தாமரை மலராய்" அவள் முகம் மலர்ந்தாள்.

சோமுவின் சகோதரி ஒன்றாக வன்னியில் இருந்த போது யுத்தத்தால் பிரிந்து போயினர் சகோதரி கணவர் பிள்ளைகள் எல்லோருமே இறந்து விட்டதாக செய்தி வந்தது. ஆனால் சோமுவின் சகோதரி மகன் ஒருவன் மட்டும் தப்பிவிட்டதாக கேள்விப்பட்டான். தேடித் தேடிக் களைத்துப்போய் எல்லாம் சரியென்று சோமு இருந்து விட்டார். இன்று வந்த செய்தி தனது மாமியின் மகன் உயிரோடு இருக்கிறார் என்பதுதான். சின்ன வயதில் இருந்து சாந்திக்கு கமலனை திருமணம் செய்வது என்ற தன் சகோதரியுடன் கதைத்து வைத்திருந்தார் சோமு.

இன்று இந்தச் செய்தி காதில் தேன் வார்த்தது.

"அப்பா, அத்தான் தடுப்பில தான் இருக்கிறார் எப்ப விடுவங்கள் எண்டு தெரியவில்லை எண்டு எழுதியிருக்கிறார்" என்றாள் சாந்தி.

"அவனாவது தப்பிவிட்டானே என்ர அப்பன் முருகன் தான் கருணை காட்டி விட்டார்" என்று கண் கலங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனப்பா கமலனை எப்ப விடுவங்கள் எண்டு ஏதும் எழுதியிருக்கோ" பார்வதி.

"இல்லை அப்பா ஆனால் விடுவங்கள் எதுக்கும் நாங்கள் ஒருக்கா போய். பார்த்துவிட்டு பிறகு லோயரட்ட கதைச்சு பாப்பம்" என்றார் சோமு.

"பிள்ளை எனக்குத்தெரியும் உன்ர மனதிற்கு நல்லது தான் நடக்கும்" என்று சோமு சாந்தியை ஆறுதல் படுத்தினார்.

சாந்திக்குச் சந்தோசம் தாளவில்லை. இனி ஒரு புது உலகம் அவளுக்காய் காத்திருப்பின் சுகத்தை அளிப்ப தற்காய். மேற்றிசை வானில் அஸ்தமிக்கும் சூரியன் அல்ல அவள். விண்மீன்கள் சூழ வானக் கடலில் உலா வரும் முழு மதி அவள்.

"அப்பா நீங்கள் எதுக்கும் ஒருக்கா. யாரோடயாவது கதையுங்கோ" என்றாள் பார்வதி.

"இல்லையப்பா அவர் நிச்சயம் வருவார்"

"இன்றல்ல நாளை"

என்றே ஒரு நாள் நிச்சயம் வருவார்.

கனவுகள் சுமந்து கண்ணீர் சுமந்து மண்ணில் வாழும் உறவுகள் தொலைத்து தேடும் இதயங்கள் எத்தனையோ அத்தனை உள்ளத்திலும் இன்று.

"வருவார் இன்றல்ல நாளை"

"என்றோ ஒரு நாள்" காத்திருப்பு இது தொடர்கதை..!

– வலம்புரி – சங்குநாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகள் சுமந்து

நிலம் நோக்கிப்படரும் ஆலங்கிளைகளில் வந்தமரும் வெள்ளைக்கொக்குகள். குளக்கரையை வட்டமிட்டுக் கொண்டிருக்கும் நாரைக்கூட்டங்கள். ஒற்றைக்காலில் நிற்கும் கொக்குகள். நீரை அள்ளி கலக்கும் சிறுசுகள். கதிரவன் சற்று மேலே கிளம்பிவிட்டான். பனிப்புகை அகன்று புற்களில் நீர்த்துளிகளை முத்துக்களாய் பிரசவித்திருந்தது. அது பளீர் பளீர் என்ற மின்னிக்கொண்டிருந்தது.

ஆலமரத்தின் கீழ்க்குளக்கட்டில் அமர்ந்தபடி வீதியையே பார்த்துக்கொண்டிருக்கின்றான். கண்ணன் சற்று மேல் நோக்கி ஆலங்கிளைகளில் தன் பார்வையை மேயவிடுவதும், ஆணும் பெண்ணுமாய் கூடியிருக்கும் கொக்குக்கூட்டங்களை பார்ப்பதும் திரும்பி வீதியைப் பார்ப்பதுமாக இருக்கிறான் பச்சைப்பந்தலில் மல்லிகைப் பூவை பரவியது போல் இருந்தது ஆலமரம். பறவைகள் பறப்பதும் வருவதுமாய் இருக்கின்றன. கண்ணன் வீதியையே பார்த்தபடி உட்கார்ந்திருக்கின்றான். சற்று தூரத்தில் ஒரு சைக்கிள் வளைவில் திரும்பியது. அவள் ராதா எங்களோடு ஒரே வகுப்பில் படித்தவள் இரண்டு வருடங்களுக்கு முன் உயர்தரப்பரீட்சை எழுதினோம். கடந்த ஒரு வருடமாகக் கண்ணன் அவளை காதலிக்கின்றான். அவள் அழகானவள். பிரம்மனின் மோக உணர்ச்சியில் ஆர்ப்பரித்து வெளிவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதக்கவிதை அவள். அவளைப் பற்றி கண்ணன் என்னிடம் கூறுவான். வெயில் சற்று சுடத்தொடங்கியது. சைக்கிள் எங்களைத் தாண்டி கோயில் வளைவில் நின்றது. என்னருகில் நின்ற கண்ணன் என்னிடம் சொல்லிவிட்டு சென்றான்.

பத்து நிமிடமிருக்கும் கண்ணன் திரும்பிவந்தான். கையில் ஒரு பார்சலுடன் அதில் அவளின் கடிதமும் இருந்தது.

"என்னடா நல்ல சந்தோசமா இருக்கிறாய்ப்போல" என்றேன்.

"ஹ்ம்..ஹ்ம்" பரவாயில்லை, பரவாயில்லை என்று அசடு வழிந்தான்.

"அப்பு உன்ர கொப்பருக்கு தெரியட்டும் என்று நான் வாயெடுக்க முன்னமே "அதெல்லாம் தெரியும் போது பார்ப்பம்" என்றான்.

***

"சரிடா எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு" என்று கூறிவிட்டு சைக்கிளை மிதித்தேன்.

சல சலத்து அடங்கும் ஆலஞ்சருகுகள். காற்றினால் வீசியெறியப்படும் புழுதி முகத்தில் அடித்துக்கொண்டு போகும். ஆணும் பெண்ணுமாய் நிறையும் குளக்கரை. ஊரவர் பிரச்சினைகள் எல்லாம் இங்கு எடுத்துப்பேசப்படும் அடுத்த வீட்டுப்பிரச்சினைகள். புதினங்கள் எல்லாம் இங்கு அரங்கேறும் சில சமயங்களில் கலகமும் வந்துவிடும். புகையைக் கக்கியபடி ஆமை வேகத்தில் வந்து கொண்டிருந்தது. யமகா சைக்கிள் ஆலமரத்தின் கீழ் தன் இருப்பை நிறுத்திக்கொண்டு பெருமூச்சுவிட்டு ஓய்ந்தது. நேரு அண்ணயும் மோகன் மாஸ்டரும் குளக்கட்டில் அமர்ந்தனர்.

"ஏன்ரா தம்பி இண்டைக்கு தொழிலுக்குப் போகேல்லயோ" என்றார்.

"இல்லை அண்ணா ஐயாவுக்கு சுகமில்ல" என்றான் கண்ணன் மோகன் மாஸ்டர் நல்லவர். எப்பவும் எங்கட ஊர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றித்தான் பேசிக்கொண்ருப்பார். வெஞ்சிறையில் வாடும் சகோதரிகளைப் பற்றியும், பறிக்கப்பட்ட நிலங்கள் பற்றியும் அடிக்கடிக் கூறுவார் கண்ணனும் அவர்கள் பேசுவதை ஆமோதிப்பான். அவர்கள் அப்போது அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்தார்கள். தாய்மண் குருதியில் குளித்துக் கொண்டிருந்தது இரத்தவாடை எங்கும் பரவியிருந்தது.

***

மட்டைப்படலையைத் தள்ளியபடி சைக்கிள் வளவுக்குள் புகுந்தது. அடுக்களைக்குள் பொரிக்கும் கருவாட்டின் நாத்தம் அடிவயிறுவரை சென்று மீளும். சைக்கிளை வேலியில் சாத்திவிட்டு மாலுக்கால் வீட்டுக்குள் சென்றான்.

“டேய் கண்ணா எங்கு மாடு மேய்க்கப்போனனியே இன்னும் ரெண்டு மாட்ட வேண்டி சோனப்புல விட்டு மேயன் எங்கயடா பூச பொறுக்கப்போனனி” என்ற வார்த்தைகளைப் பொரிந்து தள்ளினார். இன்றும் கந்தசாமி அண்ணை குடித்திருந்தார். என்பதை புரிந்துகொள்ள வெகு நேரமாகவில்லை.

“கண்ணா கண்ணா” என்று கூப்பிட்டுக்கொண்டே படலையைத் திறக்க முயன்றேன்.

“யாரடா அது” என்ற அதட்டலில் நான் அப்படியே நின்றுவிட்டேன். கண்ணனும் நானும் பள்ளிக்காலத்தில் இருந்தே நண்பர்கள் இப்போதும் எங்கள் நட்பு தொடர்ந்து கொண்டிருந்தது.

***

யன்னலோரம் அமர்ந்து மேசைமீதிருந்த புத்தகத்தை புரட்டிக்கொண்டிருந்தேன். அது தி.ஜானகிராமனின் நாவல் மிக சுவையானது எவ்வாறு இப்படியெல்லாம் வார்த்தைகளால் ஜாலம் காட்டுகிறார்களோ “ராசன் ராசன்” என்ற குரல் அந்த நாவலில் இருந்து என்னை விடுவித்தது. எழுந்து கேற்றைப் பார்க்கிறேன். கண்ணன் கதவின் மேலாக தலையைக் காட்டியபடி நின்றான். நான் பின்பக்கமாப் போய் கண்ணனை சந்தித்தேன். அப்பாச்சி வாசலிலேயே இருப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டால் பேசுவா. அவர் பழைய பஞ்சாங்ககங்கள் எல்லாம் படித்தவ. சாதி சம்பிரதாயங்களில் மூழ்கிப்போனவர் முட்டைக் கோதை உடைத்து வெளிவரும் குஞ்சாக நான் இருக்க நினைக்கின்றேன்.

"டேய் வாடா கோயிலுக்குப் போவம்" என்றான் கண்ணன்.

"எத்தன மணிக்கடா, வீட்ட அம்மா இல்ல இப்ப வருவா நான் சொல்லிட்டு வாறன்" என்றேன்.

சரி சரி தலையாட்டிவிட்டு கண்ணன் சைக்கிளை செலுத்தினான்.

வாழ்வில் ஒவ்வொரு பொழுதுகளும் இனிமை நிறைந்தது. அந்தக்காலம் உண்மையில் அன்று கோயிலுக்கு போகவில்லை. அவன் அவளைப் பார்க்கத்தான் போனான். அன்று அவன் நீண்ட நேரம் அவளோடு பேசினான் நான் முசல் மாதிரிதான் பார்த்துக்கொண்டிருந்தேன். யாரும் வருகிறார்களா என்று.

"டேய் நேரமாகுதுடா அப்பாச்சி திட்டப்போகுது" என்ற மெதுவாக அவனிடம் சொன்னேன்.

மரியாதை தெரிந்தவன் உடனேயே வந்துவிட்டான். வரும் போதே கையில் ஒரு பை இருந்தது. அதை என்னிடம் நீட்டினான்.

"டேய் இத நீ வச்சிரு நான் பிறகு வாங்கிறன்" என்றான்.

"அப்பு கிழடுக்கு தெரிஞ்சுதோ அரோகராதான்" என்று மறுத்துவிட்டேன் ஆனாலும் அவன் கேட்கும் போது மறுக்கவும் முடியாதபடி அரைகுறை மனத்தோடு வாங்கிக் கொண்டு.

"சரியடா நான் பிறகுசந்திக்கின்றேன்" என்று கூறிவிட்டு வீட்டை நோக்கி புறப்பட்டேன்.

அன்று இரவு தான் எல்லாமே மாறிப்போயிருந்தது. மாலையில் தொடங்கிய வேட்டுச்சத்தங்கள் தொடர்ந்து கொண்டே இருந்தன. குருவிகளின் கூடுகளை வல்லூறுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமிட்டுக்கொண்டன. கூடுகள் சிதைந்து சின்னா பின்ன மாகியது. பறவைகள் ஒவ்வொரு திசைநோக்கிப் பறந்து போயின. கருமேகம் சூழ்ந்து இடி இடித்து மின்னி முழங்கி யது. சூறாவளியில் சிக்கி விருட்சங்கள் முறிந்து போயின விடிவ தற்குள் கையில் அகப்பட்டதை எடுத்தபடி ஓடிப் போயின உயிர்கள். புயல் அடித்து ஓய்ந்து போய்க் கிடந்தது பூமி.

நீண்ட காலத்தின் பின் ஊர்க்காற்றை சுவாசிக்கும் ஒரு நாளில்...

அன்று வெள்ளிக்கிழமை 5 வருடங்களின் பின் இரவு நேரப்பயணம் தந்த அலுப்பை விலக்கி எழுந்தேன். அன்றொரு நாள் விடுபட்டுப்போன உறவுகளை காண வேண்டும் என்ற எண்ணம் மனத்தில் தொடர்புகளை ஏற்படுத்த நினைத்துத் தோற்றுப்போனவன்.

"டேய் கொஞ்ச நேரம் உதில படன் எங்கபோப்போற" என்ற அப்பாச்சியின் குரல் அவள் உருவம் மாறியதே தவிர உணர்வுகள் அப்படியே தான் இருந்தது என்பதை சொல்லிற்று.

"இல்ல அப்பாச்சி ஒருக்கா பெடியல பார்க்கவேணும்" என்றேன்.

"ஹம் ஹம்" என்று முகத்தில் ஒரு கசப்பைக் காட்டி விட்டு விலகினாள்.

"தம்பி இந்தா இந்த தேத்தண்ணிய குடி" என்று அம்மா நீட்டினாள் அம்மாவின் கை பக்குவம் ஒரு புதிய சுவையைத் தந்தது.

"அம்மா கண்ணன் என்ன மாதிரி சுகமா இருக்கி றானா" என்றேன் ஆவலோடு.

"நீ போவன் பாத்துக்கொண்டு வாவன் தம்பி" என்றாள் அந்தப்பதில் மனதில் ஒரு கலக்கத்தை அளித்தது.

கண்ணன் வீட்டை நெருங்கினேன் வீடு பூட்டி யிருந்தது. மீண்டும் சைக்கிளை எடுத்துக்கொண்டு குளக் கரையை அடைந்தேன். குளம் அமைதியாய் தூங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்தது. நீண்ட நேரம் அந்தக் குளக்கட்டில் அமர்ந்திருக் கிறேன். ஒரு முதியவர் மாத்திரம் குளித்துக்கொண்டிருந்தார்.

"சே என்னாச்சி இந்தக் கொக்குக்கூட்டங்களும் இல்லையே, புயல் அடித்து ஓய்ந்தது போல் மனத்தை வாட்டியது. பிடுங்கி எறியப்பட்ட விருட்சத்தின் அடியில் வேரிலிருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது.

யாரேனும் ஒரு தெரிந்தவருக்காக தனிமையை சுமந்தபடி காத்திருந்தேன். புறப்படத்தயாரான போது தூரத்தில் ஒரு உருவம் நிச்சயமாக எனக்குத் தெரிந்த முகம் அவள். அவளே தான் ராதா என்னைக் கண்டதும் ஸ்தம்பித் துப்போனாள் ஏதோ ஒரு துக்கத்தைக் கூறமுடியாமல் தடுமாறினாள் என்பது புரிந்தது.

"கண்ணன் எங்க ஆள வீட்டில காணல்ல" என்று நானே முந்திக்கொண்டு கேட்டேன். அவளால் அழுகையை அடக்க முடியவில்லை அவள் கையில் இருந்த குழந்தையும் அழத்தொடங்கியது.

குழந்தையின் அழுகையை நிறுத்த கண்களை துடைத்து உதட்டளவில் சிரித்துக்கொண்டாள். குழந்தை யும் ஒரு சிறு புன்னகையை உதிர்த்துவிட்டு கையசைத்தது.

"ராசன் கண்ணன். கண்ணன் வன்னியில தவறி விட்டா னாம்" என்று கூறிவிட்டு மீண்டும் அழத் தொடங்கினாள்.

என் மனம் வேதனையை தாங்காது. தலையில் கை வைத்தபடி அப்படியே கட்டில் உட்கார்ந்திருந்தேன். நீண்ட நேரம் நான் பேச முடியாதபடி மௌனித்துப்போனேன்.

"இது உங்கட பிள்ளையா" என்றேன்

"ம் போன வருஷம் தான் எனக்கு கலியாணம் நடந்துச்சு" என்று கூறிவிட்டு நடந்தாள்.

அவள் கண்ணனை மறக்கவில்லை என்பதை அவள் கண்கள் பெய்த மழையில் இருந்து புரிந்துகொண்டேன். காதல் ஒரு காலத்தில் எழுதப்படும் உயிர்க்கவிதை பிரிந் தாலும் ஏதோ ஒரு நொடியில் மீண்டும் மீண்டும் துளிர்த்து மறைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேதை

ராத்திரியின் நிசப்தத்தைக் கிழித்தபடி வேம்பின் மீதிருந்த நத்துக் கத்திக்கொண்டிருந்தது. அது ஒரு பயங்கரத்தையும் அந்த வேளையில் ஒரு பயத்தினையும் தந்தது.

"மூதேசி போ அங்கால பிள்ளை படுத்திருக்குது இஞ்ச வந்து கத்துற" என்ற திட்டிக்கொண்டிருந்தாள் கண்ணகை.

நான் கண்களைக் கசக்கியபடி தலைமாட்டில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். நேரம் அப்போது தான் பதினொன்றைக் காட்டியது.

"என்ன அம்மாச்சி எங்கட வேம்பில தான் நிக்குதோ" என்று கேட்டேன்.

"ஓம் மேன அதில தான் நிக்குது" என்றாள் அம்மாச்சி.

நீண்ட நேரம் கண்கள் உறக்கத்தை தொலைத்து படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். மேகங்கள் சூழ்ந்த வானில் வெண்ணிலவின் ஊர்வலம். பொது நலம் உணர்த்தும் பொக்கிஷம் அவள் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தாள்.

அன்று நீண்ட நேரம் தூக்கமின்றி நான் காரணமும் இருக்கத்தான் செய்தது. பல்கலைப் படிப்பை படித்து பல வருடம் ஆனதால் கவுன்சிலிங் படித்துக்கொண்டேன். அதுவே அப்போது எனக்கு ஒரு வேலை வாய்ப்பையும் கொடுத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று வெள்ளிக்கிழமை நான் வைத்தியசாலைக்கு சென்றேன். அன்று எனக்கு ஒரு நோயாளியுடன் கதைக்க வேண்டியிருந்தது. அன்று தான் அந்தப் பெண்ணைச் சந்தித்தேன். சிறு வயது தான் ஆனாலும் பார்ப்பவர்க்கு அவள் தோற்றம் வியப்பையும், ஏற்படுத்தும் நான் அலுவலகத்தினுள் நுழைந்து விட்டேன். சிறிது நேரத்தில்.

"அம்மா அம்மா" என்று செல்லமாக அழைத்தபடி அவள் நான் அனுமதிக்கு முன்பே நுழைந்து விட்டாள்.

"வாங்கோ" என்றேன்.

அவள் நாணியபடி கைகள் கட்டிக்கொண்டு நின்றாள். அவளின் வெள்ளை நிறம் பின்புறத்தை உரசும் கூந்தல். கரு கருவென்றிருந்த புருவங்கள் பருவ வயசின் வெளிப்பாடுகளை அப்பட்டமாகக் காட்டி நிற்கும் அவள் தோற்றம். அவளின் அழகுக்கும் அறிவுக்குமான இடைவெளிகளைப் புரிந்து கொண்டேன். நான் அவளை ஒருமுறை உற்றுநோக்கினேன் பின்,

"சரி இருங்கோ" என்றதும் வெகு லாவகமாக வந்து உட்கார்ந்தாள்.

"சொல்லுங்கோ உங்கட பேர் என்ன" என்று கேட்டதும் பட்டென,

"கீர்த்தனா" என்றாள்.

ஒவ்வொன்றாகக் கேட்டுக்கொண்டே வந்தேன். அவளும் தன் கதையெல்லாம் சொன்னாள். உயர்தரப் பெறுபேறு அவளுக்கு நன்றாக அமையவில்லை. பிறைவேற் கோர்ஸ் செய்தாளாம் அடிக்கடி பஸ் பிரயாணம் அதில் ஒருவனோடு காதல் பையன் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்தான். பெண் வீட்டில் தங்கள் உறவுக்கார ரிலேயே திருமணம் பேசி நிச்சயித்தார்கள். அவள் கதையைக் கேட்டுக்கொண்டே வந்தேன். சட்டென்று லேஞ்சியை எடுத்து கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"அப்புறம் என்ன நடந்தது" என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விமலின் நண்பர்களின் உதவியால் நாங்கள் இருவரும் வீட்டை விட்டு வந்தோம்" என்றாள்.

"ஏன் உங்கட வீட்டார் தேடலையா" என்றேன்

"இரண்டு வீட்டிலும் பிரச்சினை எங்களை சேர்க்கல" என்று சொல்லும் போதே கண்கள் கண்ணீர் மழை பொழிந்தது.

"சரி சரி இப்ப ஏன்மா சூசைட் பண்ணப்பாத்தீங்க" என்று விடயத்துக்கொண்டு வந்தேன்.

"இல்ல எனக்கு விமலைப் பிடிக்கல" என்றாள்.

"ஏன் உங்களுக்குள் என்ன பிரச்சினை" என்று கேட்டேன்.

அவள் மறுபடி தன் திருமண வாழ்க்கை பற்றி அடுக்கினாள். காதலன் காதலிக்கும் போது நல்ல பிள்ளையாட்டம் இருந்தான். அப்புறம் பிரச்சினை பூதாகரமானது அடிக்கடி இருவருக்கும் பிரச்சினை. தண்ணி வேற அடிப்பான் எப்பவும் இருவருக்கும் சண்டை அதற்குப் பிறகு வேலையும் இல்ல. இருவருக்கும் சண்டை வலுத்துவிட்டது. ஒரு நாள் சண்டை போட்டுவிட்டு வீட்டை விட்டுக்கிளம்பிவிட்டான். தனிமையில் இருந்த தான் சூசைட் பண்ணினதாக சொல்லி விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.

"சரி சரி கண்ணைத் துடையுங்கோ" என்று கூறினேன்.

"ஏம்மா உனக்கு விமலைப் பற்றி முன்னமே தெரியாதா" என்றேன்.

"இல்ல எப்பவும் நல்லாக் கதைப்பார். நான் இல்லாட்டி செத்துப்போயிடுவன் எண்டு சொல்வார். தன்னோட அம்மா, அக்கா என்று எல்லோரும் கதைத்தார்கள். ஆனா அவனோட சொந்தமெல்லாம் வெளிநாட்டில் எண்டு பிறகுதான் தெரியும்" என்றாள்.

"சரி இப்ப விமல் எங்க" என்றேன்.

"எனக்குத் தெரியல" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு பக்கென்றது திகைத்துப்போனேன். இந்த உலகம் என்ன உலகம் இது. இப்படி என்று மனம் அலுத்துக் கொண்டது. காதல் தூய்மையானது. வாழ்க்கை அர்த்தங்கள் நிறைந்தது. பருவ வயதின் தேடல் அர்த்தமற்ற வாழ்க்கை, இதற்கு ஒரு பெயரில்லை. உண்மைக்காதல் சில இதனால் கல்லடி சுமக்கிறது. நீண்டதொரு மௌனம். என் மௌனத்தைக் கலைத்தபடி.

"அம்மா எனக்கு இந்த வாழ்க்கை வேண்டாம், என்ர அப்பா அம்மாவோடு சேர்த்து விடுங்கோ" என்று என் கையைப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

"சரி உன் விமல் வந்து கேட்டா என்ன செய்வீங்க" என்று கேட்டேன்.

"இல்ல அம்மா எனக்கு அவர் வேண்டாம். எப்படியாவது என்னோட வீட்ட சொல்லுங்கோ" என்று கெஞ்சினாள்.

சரி சரி இனியாவது எதையும் சிந்திச்சு செய்ய வேணும், உங்கள் அவசர புத்தியால் எவ்வளவு பிரச்சினை உங்கட வாழ்க்கையை நீங்களே அழிக்கிறியள். நீங்க மட்டு மல்ல இப்படி எத்தனைபேர். ஆனா அதுக்கெல்லாம் முடிவு சூசைட் எண்டு இருக்ககூடாது. இது ஒரு தீர்வும் அல்ல. என்ன இனி இப்படி எதுவும் செய்யக்கூடாது சரிதானே" என்றேன்.

"இல்லை இனி நான் அப்படி ஏதும் செய்யமாட்டேன்" என்று முகத்தை மூடியவாறு அழுகொண்டிருந்தாள்.

"சரி சரி நீங்க போங்கோ உங்கட வீட்டுக்கு சொல்லுவினம்" என்றேன்.

அவள் எழுந்த விதமும், நடையும் எனக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. இனி ஒரு போதும் இப்படியான முடிவு எடுக்கமாட்டாள் எதிர்காலம் அவள் வாழ்வு நன்றாய் அமையும் இன்றல்ல நிச்சயம் அவள் வாழ்வு விடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நேரம் தூக்கம் கண்களை சேரவில்லை அவள் எண்ணங்களே சுழன்று கொண்டிருந்தது. இரவு நேர வானொலிப் பாடல்கள் தாலாட்டுவது போல் இருந்தது. அப்படியே கண்ணயர்ந்து கேட்டேன்.

அன்றோடு அந்தப்பெண்ணை நான் காணவில்லை. அவளின் பெற்றோர் அழைத்துச்சென்றதாக சொன்னார்கள். அதன் பின் நானும் பிரதேச செயலகம் ஒன்றில் வேலை கிடைத்து வெளியூர் வந்து விட்டேன்.

காலை நேரம் அலுவலகம் அவசர கதியில் இயங்கிக் கொண்டிருந்தது. நான் பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கான பணம் பெற்றுப் பற்றுச்சீட்டு வழங்கிக் கொண்டிருந்தேன்.

"அம்மா சேட்டிபிக்கற் எடுக்கவேணும்" என்று ஒரு குரல்

"போம் எடுத்து நிரப்பித்தாங்கோ" என்றேன்.

போம் வாங்கிவிட்டு பணம் பெறுவதற்காக நிமிர்ந்து பார்த்தேன் அவள். அவளே தான். அவள் தோற்றமே மாறியிருந்தது. பக்கத்தில் ஒரு அம்மா ஒரு கைக்குழந்தை யோடு நின்றிருந்தார். அவளுக்கு என்னை ஞாபகத்தில் இருந்தது என்பதை அவள் சிரித்த சிரிப்பில் இருந்து தெரிந்து கொண்டேன். சிறிது நேரத்தில் சான்றிதழ் பெற்றுச்சென்று விட்டாள்.

மணி **12.30** ஐக் காட்டியது. அலுவலகத்தில் இருந்து சாப்பாட்டிற்காக கன்ரீனுக்கு வந்தேன்.

"அம்மா அம்மா" என்று ஒரு குரல். சட்டென்று திரும்பினேன். அவள் தான் நின்றாள்.

"நான் அம்மா அப்பாவோடு தான் இருக்கிறன் எனக்குத் திருமணம் முடிந்துவிட்டது. இது என்னோட மகன் தான்" என்றாள்.

நான் கண்களை அகல விரித்து தேடினேன் அதற்குள் அவள் புரிந்துகொண்டாள்.

"இல்ல அம்மா என்னோட அவர் வெளிநாட்டில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட சொந்தத்தில தான்" என்றாள்.

என் மனதினுள் ஒரு சந்தோசம் அவளின் அம்மா என்னை நோக்கினாள், அவள் பார்வை ஆயிரம் வாழ்த்துக்களை அள்ளி வழங்கியது போல் இருந்தது. அவள் வாழ்வில் துயரடைந்த பொழுதுகளை மறந்து கடந்து விட்டாள். அவள் கையில் புன்னகைத்தபடி இருந்த குழந்தை அவளின் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தைக் கொடுத்திருந்ததை எண்ணி ஒரு நிம்மதியோடு...

"சரி சந்தோசம் போயிட்டு வாங்கோ" என்று கூறிவிட்டு கன்ரீனை நோக்கி நடந்தேன்.

- வலம்புரி - சங்குநாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொட்டில் பழக்கம்

மாலை நேரத்தின் மயங்கும் வேளை. கதிரவன் தன் வரவினை முடித்து கண்ணயர்ந்து போகின்றான். செங்கம்பளம் விரித்து மேற்றிசைக் கோடியில் நிலவுப் பெண்ணுக்காய் இரவின் காத்திருப்பு. கால்களை நனைக்கும் படி தொட்டுவிட்டு ஓடும் நீரலைகள். சட்டென்று மணலுள் ஒளிந்து கொள்ளும் சிறு நண்டுக் கூட்டங்கள் வெள்ளலை புரளும் கடற்கரையோரத்தில் அந்த மயங்கும் வேளையில் மணவில் கால் புதைத்தபடி அமர்ந்திருக்கின்றேன்.

"அப்பா அப்பா இஞ்ச ஒரு நெண்டு" என்று மணலில் ஒளிந்த நண்டைப் பிடிக்க கங்கணம் கட்டிக்கொண்டு நின்றாள். என் மகள் ராதை. எப்படியாவது வீடு போவதற்குள் ஒரு நண்டையாவது பிடித்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு.

நானும் மனிதன் தானே எனக்குள்ளும் சில கற்பனைகள், தேடல்கள், உணர்ச்சிகள் இவைக்குள் அடங்கிக் கிடப்பவன் தானே மனிதன். இந்த இதமான கடற்கரை, வருடும் தென்றலின் சுகம். கூடவே காதலியின் அரவணைப்பும் இருந்தால் நினைக்கும் போதே என் உடல் உஷ்ணக் காற்றை உமிழ்ந்தது. அடிக்கடி அந்தி மாலையில் மயங்கி "மதுவுண்ட வண்டாய்" இருந்த என்னை.

"அப்பா இஞ்ச ஒரு சிப்பி" என்று கூப்பிட்டு என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையில் இருந்து கலைத்து விடுவாள் ராதை.

மனைவிக்கு அப்புறம் இன்னொரு பெண்ணை நினைக்காமலிருப்பதற்கும், கதைக்காமலிருப்பதற்கும் இன்று ராமர்கள் இருப்பதாக நான் ஆராய விரும்பவில்லை இருந்தும் எம் பண்பாடு, எம் குடும்பம் என்று நினைக்கையில் விருப்பமில்லா விடினும் இந்தக் கற்பனைகள், உணர்ச்சிகள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு மீண்டும் நாகரிக மனிதர்களாய் நடை போடுதல் தானே அழகு.

"போங்கப்பா நீங்க அந்தச் சிப்பிய தண்ணி இழுத்துக் கொண்டு போடுத்து" என்று சிணுங்கினாள் ராதை.

அந்த நொடியில் அவன் கண்கள் பிரசவித்த முத்துக்கள் உதிர்ந்த அந்தக் கடற்கரை மணலையே நனைத்து விட்டிருந்தது.

நீண்ட நேரம் அவள் என்னோடு பேசவில்லை மீண்டும் அந்தச்சிப்பி கரைக்கு வராதா என்று இருவரும் ஆவலோடு காத்திருந்தோம்.

"அப்பா எதுவும் நமக்கு கிட்ட வரும் போது பிடிச்சிடணும் இல்லாட்டி பிறகு வராது" என்றாள்.

"ஹம் ஹம்" என்ற தலையாட்டி விட்டு பேசாமல் இருந்தேன். அவள் கூறிய அந்த வார்த்தைகளில் இருக்கும் அர்த்தங்களை அலசி ஆராய்ந்து கொண்டு இருந்தேன். காலம் இப்படித்தான் போய்க்கொண்டிருக்கிறது மீண்டும் திரும்பாமல்.

ராதைக்கு அப்போது ஐந்து வயது தான் ஆனால் அவள் கெட்டிக்காரி என்று நேர்சறி ரீச்சர் கூறும் போது எனக்குள் ஓர் கர்வம் வலுக்கும். அவள் செய்யும் குறும்புகள், ரசிக்ககூடியதாக இருக்கும். அவள் சில சமயம் கோபித்துக் கொண்டு ஓடி விடுவாள்ஆனாலும் வீட்டிற்கு வரும் போது.

நானும் வேண்டுமென்றே "எங்க ராதைக்குட்டிய காணோம்" என்றதும் கதவுக்குப்பின்னால் ஒளிந்து கொள்வாள். நான் அவளைப் பார்த்தாலும் அந்த நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக் காணாதது போல் பாசாங்கு பண்ணவே முயற்சி செய்வேன் ஏனெனில் அந்த நேரத்தில் அவள் அடையும் ஆனந்தத்தை அழிக்க நான் விரும்புவதில்லை.

சில நேரங்களில் அவள் கேட்கும் கேள்விகளுக்கு என்னால் பதில் கூற முடியாமல் போய்விடும்.

"கொஞ்சம் இரும்மா" இந்தப் புத்தகத்தைப் பாக்குறன் என்று தேடுவது போல் நடிப்பேன்.

"அப்பா நமக்கு தெரியாட்டி புத்தகங்கள் பார்த்துத் தெரிஞ்சுக்கலாம் என்னப்பா" என்றாள்.

"ஓமடா செல்லம்" என்றதும் தானும் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து மனம் போன போக்கிலே சொல்லிக்கொண்டிருப்பாள்.

அன்றும் அந்த மாலை வேளையில் கண்களுக்குள் அடக்க முடியாதபடி காட்சிகள் விரிந்து கிடந்தது. அந்த காட்சிகளில் நனைந்து போயிருந்தேன்.

"என்ன லிங்கம் ஆறுதலா" என்ற குரல் கேட்டு சட்டென்று திரும்பினேன்.

மனைவி குழந்தைகளோடு எதிரில் நின்றான் கேசவன். கேசவன் என்னோடு ஒன்றாகப் படித்தவன்.

"ஓம் கேசு சும்மா மகளையும் கூட்டிற்று" என்று கூறியதும் அவன் தன் வாய் அகலத்திற்கு ஒரு சிரிப்பை சிரித்து மூடினான்.

"ராதைக்கு அந்த நேரத்தில் விளையாடுவதற்கு நண்பர்கள் கிடைத்துவிட்டார்கள். அவர்கள் மணலால் கோயில் செய்து விளையாடினார்கள்.

"அப்ப எப்படி வேலைகள் எல்லாம்" என்றேன்.

"பரவாயில்லடா என்ன கொஞ்சம் பஸ் பயணம் கஷ்டம்" என்றான்.

வெளியிடங்களுக்கு வேலை செய்வதில் உண்டான சலிப்பு அவன் முகத்தில் நிழலாடியது.

"அப்ப பிள்ளைகள் என்ன படிக்கினம்" என்றதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமடா மூத்தவள் பெட்டை 2ம் ஆண்டு படிக்கிறாள் பொடியன் 1ம் ஆண்டு அவன் கொஞ்சம் குழப்படிடா" சலித்துக்கொண்டான்.

பள்ளிக் காலத்தில் கேசவன் செய்த குறும்புகள் அப்போதும் எனக்குள் வெளிவந்து போனது நான் உதட்டளவில் சிரித்து நின்றேன்.

"என்னப்பா ஏதோ சிரிக்கிறா போல என்றான் கேசவன்.

"இல்லடா ரீச்சர் கிட்ட அடிவாங்கின ஞாபகம் அது தான்" என்றதும் அவனும் சேர்ந்து சிரித்தான். ஒருவருக் கொருவர் பள்ளிக் காலத்து நினைவுகளை பகிர்ந்து கொண்டிருந்தோம் பள்ளித்தோழியின் நினைவுகளில் மூழ்கிக்கிடந்த எனக்கு.

"வீர்" என்று அலறிய சத்தம் என்னை திகிலடையச் செய்தது.

"அப்பா அப்பா தம்பி அடிச்சிட்டான்" என்று அழுதுகொண்டு நின்றாள் கேசவன் மகள். கேசவன் மனைவி சமரசம் செய்து கொண்டிருந்தாள். ஆனால் அந்தப் பையன் அதற்குப் பணியவில்லை. கேசவனும் தன் பங்குக்கு இருவருக்குள்ளும் இணக்கத்தை ஏற்படுத்த பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான்.

அவன் விஷ்வாமித்திரனைப் போல் சபிப்பதற்குத் தயாராக நின்றான் போல எனக்குப்பட்டது. அவ்வளவு கோபம் அவன் கண்களில்.

"டேய் பேசாமல் இரு" என்று கேசவன் கொஞ்சம் தன் பங்குக்கு உரத்த குரலில் மிரட்டினான்.

"போடா உன்ர கொப்பர் வீட்ட" என்று தொடங்கி வாய்க்கு வந்ததை அடக்காமல் பொரிந்து தள்ளினான் அந்தப் பையன்.

அந்தக் கணம் நான் ஸ்தம்பித்துப் போய்விட்டேன். என் மகள் ராதை என்னைக் கட்டி அணைத்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேசவன் தன் மகனின் செயலை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றான். தன் வாய் அகலத்துக்கு சிரிக்கவும் செய்தான். அந்த நேரத்தில் அவன் சிரித்த சிரிப்பில் அர்த்தமில்லை. அந்தச் சிரிப்பு ஒரு அசிங்கத்தை பரவியதாய் எனக்குப் பட்டது.

அந்தச் சிறு மழலையின் சூழலைப் புரிந்துகொள்ள எனக்கு வெகு நேரமாகவில்லை. என் கோபம் எல்லாம் நண்பரின் மீது தான் இருந்தது.

"டேய் மச்சான் இவன் அப்பா மாதிரிடா ஒரே பிடிவாதம்" என்று சொல்லி மறுபடி சிரித்தான்.

அந்தச் சிரிப்புக்களுக்குள் செத்துக்கொண்டிருக்கும் சிறு மழலையின் எதிர்காலத்தை எண்ணி நான் திகைத்து நின்றேன். தாய் தந்தை உறவுகள் தானே குழந்தைகளின் எதிர்காலத்தைச் செதுக்குகின்றன.

"சரி மச்சான் அவனோட இதில நிண்டால் கரைச்சல் பிறகு சந்திப்பம்" என்று சொல்லிவிட்டு நடந்தான்.

அவன் நடந்து கொண்டிருந்தான்.

நான் அப்படியே நின்று கொண்டிருந்தேன்.

அந்தப் பையனில் உறைந்து போன என்னை விட்டுவிட்டு நானும் எழுந்து நடந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனிதம்

புகையைக் கக்கியபடி உறுமிக்கொண்டு சென்றது அந்த மோட்டார் சைக்கள். பக்கத்தில் வரும் போதே அதன் சத்தம் வயிற்றில் புளியைக்கரைத்தது போலிருந்தது. ஏன் தான் இப்படி முந்திக்கொண்டு செல்கிறார்களோ. தெரிய வில்லை. மனதில் எண்ணிக்கொண்டே சைக்கிளை மிதித்தேன்.

அப்போது நேரம் எட்டுமணி இருபதைக் காட்டியது. எப்படியாவது 10 நிமிடத்திற்குள் போயாக வேண்டும். இல்லாட்டி கோடு கிறீடுவார். சைக்கிளை நிறுத்திவிட்டு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தேன். "மண்போட்டா மண் விழாது" அவ்வளவு சனம் என்று ஒரு வயது வந்த நர்ஸ் சொல்லிக்கொண்டு போனாள். நானும் ஒரு மாதிரி விலத்திக்கொண்டு போய் அலுவலகத்தில் நுழைந்தேன். நான் தான் அன்றைக்கு கடைசி.

"என்னப்பா இண்டைக்கு வேளையோட" என்று நண்பர் அசடு வழிந்தார்.

"ஓமப்பா இண்டைக்கு கொஞ்சம் வேலை"

அதுதான், என்று சொல்லிவிட்டு அறைக்குப் போனேன். அன்று அவசரமாக முடிப்பதற்கு சில கருமங்கள் காத்துக்கிடந்தன. நானும் திடசங்கற்பத்தோடு போய் உட்கார்ந்தேன்.

சற்று நேரத்தில் ஒரு அம்புலன்ஸ் வண்டி சைரன் ஒலியோடு ஆர்ப்பாட்டமாய் வந்து நின்றது. எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதறி அடித்துக்கொண்டு ஓடினார்கள். "இதெல்லாம் பழகிப்போன ஒண்டு தான்" என்று இருந்துவிட்டேன். நானும் இந்த அலுவலகத்திற்கு வந்து பல வருடமாகி விட்டது. அடிக்கடி அவலக்குரல் கேட்டுக்கொண்டிருக்கும்.

"இது களபூமி" என்று என் நண்பர் கூறும் வார்த்தை அப்போது தான் ஞாபகத்திற்கு வரும். ஒவ்வொரு முறையும் அந்த சத்தத்தைக்கேட்கும் போது அடி வயிறு கலங்கும். பீதி மேல் நோக்கி எட்டிப்பார்க்கும். யாரோ ஏதோ என்று மனம் கலங்கும். அதற்கு மேல் நானும் இருக்க முடியாமல் இறங்கிச் சென்றேன்.

ஸ்ரெச்சரில் ஒரு பையனைக் கிடத்தியபடி தள்ளிக் கொண்டு போனார்கள். ஆக மிஞ்சிப்போனால் இருபத்தேழு இருபத்தெட்டு வயதுதான் இருக்கும். ஆள் அடையாளம் தெரியாதபடி இரத்த வெள்ளத்தில் கிடந்தான். யாரென்று பார்ப்பதற்குள் ஈயூக்க கொண்டு போனார்கள்.

"என்னடா என்ன நடந்தது" என்ற ஒரு பெடியன கேட்டேன்.

"அக்ஸிடன்டாம்" என்று கூறிவிட்டு விலகிப் போனான்.

அப்போது தான் எனக்கு பொறி தட்டியது. நான் றோட்டில விலத்தின பையன் தான். அவன் அணிந்திருந்த வெள்ளை சேட் சிவப்பாக இருந்தது.

"ஐயோ கடவுளே ஏனப்பா இந்தப் பெடியன் இப்படிப் போய் அடிபட்டது" என்று பக்கத்தில் நின்ற சக ஊழியரிடம் பேச்சுக்கொடுத்தேன்.

"இதுகள் திருந்தாதுகள் சரி கொஞ்ச நேரம் லேட்டாப் போனா என்ன குடியா முழுகிப்போகுது" என்ற தன் மனம் புழுங்கினார்.

சற்று நேரத்திற்கெல்லாம் அந்தப் பெரிய டொக்டர் தன் பரிவாரத்தோடு அந்த அறைக்குள் நுழைந்தார். அவரப் பார்த்ததும் ஒரு நம்பிக்கை. உண்மையில் அவர் கைராசிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரரானவர் எந்தப் பிரச்சினை எண்டாலும் லேசில கண்டு பிடிச்சு வைத்தியம் செய்யிறதில கெட்டிக்காரரர் என்று கேள்விப்பட்டதுண்டு. சாந்த சொரூபமாக இருப்பார். யாரையும் கடிந்து கொள்ள மாட்டார்.

சிலரைப் பார்த்தாலே இருக்கிற வருத்தம் கூடியிடும். எப்ப பார்த்தாலும் சிடுமூஞ்சியாட்டம் இருப்பார்கள். அன்பாக நாலுவார்த்தை கதைக்க மாட்டாமல் என்ன செயலோ, என்று நண்பரிடம் சொல்லி அலுத்துக் கொண்டேன்.

"பேசாம இருப்பா யாராவது கேட்டாலும்" என்ற என்னை தடுத்து நிறுத்தினார்.

நான் அந்த பெரிய டொக்டரைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கும் போதே ஒரு பெண் அழுது குளறிக்கொண்டு வந்தாள். இடுப்பில் ஒரு சின்னக்குழந்தையும் ஆக மிஞ்சிப் போனால் அதுக்கு 2 வயதிருக்கும் அவள் அப்படியே ஈயூக்க நுழைந்தாள்.

"அம்மா அம்மா இஞ்ச வாங்கோ பிள்ளைய விட்டுப் போட்டுப் போங்க பிள்ளை பயந்திடும்" என்று வெளியில் நின்ற செக்ரியூட்டி தடுத்தான்.

அவள் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தவள் போல போட்டதப் போட்டபடி விட்டுட்டு ஓடி வந்திருக் கிறாள். அவள் தோற்றம் அப்படி இருந்தது.

அந்த இடமே அவளின் கூக்குரலில் அதிர்ந்தது.

"குறுக்கான போனதுக்கு சொன்னன் வீச்சா ஓடாத ஓடாத எண்டு சொல்லுக் கேட்டுதே" என்று திட்டவும் செய்தாள். அவள் நிலத்தில் இருந்தபடியே அழுது கொண்டி ருந்தாள்.

சற்று நேரத்தில் அந்தப் பையனை தியேட்டருக்கு கொண்டு போனார்கள். அந்தப் பெண்ணும் பின்னாலேயே ஓடினாள். அவள் படும் பாட்டை அப்போது கூற வார்த்தைகளை நான் அடையவில்லை. அந்த நொடி அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் என்னவெல்லம் துன்பமடைந்திருக்குமோ. உண்மை யில் இப்ப அவன் தன் மனைவியைப் பார்த்தாள். இனி எப்பவுமோ இப்படி செய்யமாட்டன் என்று நினைத்தேன்.

"இதெல்லாம் யோசிச்சா இந்தப்பெடியள் இப்படி செய்யாதுகள்" என்ற நண்பர் ஆதங்கப்பட்டுக்கொண்டார்.

நானும் எனது நண்பரும் கன்ரீன் போய் ஒரு பிளேன் ரீ குடித்துவிட்டு வந்தோம். எனக்கு வேலை செய்ய முடியாமல் இருந்தது. ஆனாலும் நமக்கு இது ஒண்டு புதிதில்லை.

"என்னப்பா இந்தப் பெடியனுக்கு ஏதும் நடந்தால் இந்தப் பிள்ளையின்ரை வாழ்க்கை" என்று நண்பரைப் பார்த்துக் கூறினேன்.

"நீயும் நானும் கதைச்சு என்ன ஆகப்போகுது"

"அதுவுஞ்சரி தான்" என்று தலையசைத்தேன்.

"வெளிநாட்டுக்காரன் கண்டுபிடிக்கிறதெல்லாம். நம்மட ஊரிலதான் சேதாரமாகிது என்ன" என்று நண்பர் கூறியதும் பொருத்தமாக இருந்தது.

"சரி வாகனம் போனாலும் பரவாயில்லை உயிர் போனா வீணா வாணாளை அரைவாசியில போக்காட்டு துகள்" என்று நான் ஆதங்கப்பட்ட போது.

"உதெல்லாம் வேணும் றோட்டால போகேலாது. கவுட்டக் கிழிச்சுக்கொண்டு வந்து இடிக்கிற மாதிரி தானே ஓடுதுகள்" என்று ஒரு முதியவர் கூறியபடியே நடந்து சென்றார்.

"ம்...இண்டைக்கு எத்தனை பேர் மனசில இந்த பிரச்சினை இருக்குமோ" என்ற நான் கூறும் போதே.

"சரி சரி வா போவம் இதில நிண்டால் சேர் வந்தால் பிரச்சினை" என்ற நண்பர் என்னை இழுத்தார்.

நாங்கள் நடக்கத்தொடங்கிய போது அந்த டொக்டர் தியேட்டருக்குள் இருந்து வெளியே வந்தார்.

"ஐயா ஐயா அவருக்கு என்ன?" என்று பதறியடித்துக்கொண்டு ஓடினாள் அப்பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா பிரச்சினை இல்லை, பயப்படாதேங்கோ தலையிலயும் அடிபட்டிருக்கு ஒருக்கா பெரியாஸ்பதிரிக்கு அனுப்புவம்" என்று சர்வசாதாரணமாக சொன்னார்.

அவள் கையெடுத்துக் கும்பிட்ட போது

"ஏனம்மா கும்பிடுறியள். போங்க போய் பாருங்க பிரச்சினை இல்லை" என்று கூறிவிட்டு நடந்தார்.

மனிதனும் தெய்வமாகலாம் சில சமயம். சில வைத்தியர்கள் இப்போதும் அப்படித்தான்.

நாங்கள் நடந்து கொண்டிருந்தோம் எங்களைக் கடந்து சென்ற நர்ஸ்.

"சேர் டீ போட்டாச்சு எடுத்திட்டுப்போங்கோ" என்றாள்

இல்ல இல்ல பரவாயில்ல என்னோட வைவ் க்கு. இண்டைக்கு ஒரு சேர்ஜறி நான் யாழ்ப்பாணம் போகோணும் பிறகு குடிக்கலாம்.

"என்ன சேர் minor Surgeriya தானே" என்று நர்ஸ் தடுமாறும் போதே

"yes கொஞ்சம் major surgery தான்" Emergency தானே அதான் இத முடிச்சிட்டுப்போகவேண்டி இருந்தது. என்று சொல்லி விட்டு நடந்தார்.

எனக்கும் நண்பருக்கும் இதைக் கேட்ட மாத்திரத்தில் வாயடைத்துப்போனது.

அவர் நடந்து கொண்டிருந்தார். அவருடன் கூடவே மனிதாபிமானமும், கடமையும் சேர்ந்து பயணித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவசோதி எமது மாணவன். அவனுக்குள் இத்தகைய ஆற்றல் இருக்கிறது என்பதை மாணவப் பருவத்திலே நான் அறியவில்லை. அறியும் வாய்ப்பும் வசதியும் இல்லாத கற்றலும் கற்பித்தலும் தானே நமது கல்வி முறைமையிற் கோலோச்சுகின்றது.

சிவசோதி கரவெட்டியைச் சேர்ந்தவர். செ.கதிர்காம நாதன், ரஞ்சகுமார், ச.முருகானந்தன் முதலான சிறந்த சிறுகதையாளர்களைத் தந்த கிராமம் கரவெட்டிக் கிராமம். கரவெட்டியின் பண்பாடு, பழக்கவழக்கம், மொழி, வாழ்வியல் முதலானவை ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக இருக்கின்றன என்று கருதுகிறேன்.

சிவசோதியின் கதைகளைப் பார்க்கும் போது புதுமைப் பித்தன் 'நான் கண்டது, கேட்டது, காணவிரும்பியது, காண விரும்பாதது இவை தான் என்னுடைய கதைகள்' என்று கூறிய கூற்றே நினைவுக்கு வந்தது.

– பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org